கண்மோகள

274

தீபம்
டச்சி)

அ 2 ண

விஷய அட்டவணை

சித்திரைத் திருநாள்	''குகப்ரியை''
பாரதநாட்டு திலகங்கள்-லக்ஷ்மி சங்கரய்யர்	வை. மு. கோ.
என் மனைவியும் டெலிபோனும்-சிறு கதை	பத்மாவதி
வனிதா மண்டலம்-''கிராம ப்ரவேசம்''	வை. மு. கோ.
கையும் களவுமாய்-முதலாழ்வார் கண்ட கிருஷ்ணலீலை	''பி. ஸ்ரீ.''
நமது கை-ஒரு ரஸமான சித்திரம்	எஸ். அம்புஜம்மாள்
திருப்பதி யாத்திரை-8-வது பகுதி	வை. மு. ஸ்ரீ.
ஞானதீபம்-(தொடர்ச்சி)	வை. மு. கோ. 129-



மங்களகரமான சித்ரபானு வருஷம் பிறந்துவிட்டது. இவ்வருடத்தில் ஆண்டவன் கிருபையால் நம்மெல்லோருக்கும் சகல மங்களமும் நம் தேசத் திற்கு அபாரமான ஜெயமும் உண்டாகவேண்டுமென்று அவனடி தொழுது வேண்டுகிறேன்.

எங்கு பார்த்தாலும் மக்களிடையே பீதியும், யுத்த மூழக்கத்தின் பயங் காமும் த்வனிக்கும் இச்சமயம் நாம் மூலைக்கொருவராகச் சிதறிப்போய் கிராமங்களிலும், குக்ராமங்களிலும் வசிக்கும் நிலைமை அடைந்திருந் போதிலும், கூடிய சீக்கிரத்திலேயே நாம் சந்தோஷமாயும், மலர்ந்த முக திடனும் பழயபடி சந்திப்போம் என்பதில் ஐயமே இல்லை.

விலாசம் மாறுதல்

இக்காலத்தின் கோலத்தில் கட்டுப்பட்டுள்ள நமது மோகினியின் க லயமும் தற்சமயம் சிங்கப்பெருமாள் கோயில் என்கிற ஊருக்கு மாற்ற ...ின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றேன். கிராமத் ... தனது அலங்காரத்தில் ஒரு சிறிதும் குன் ...ற நகைத்த முகத்துடன் கிளம்பி ப ... நாடி வழக்கம்போல வருவாள்.

தங்களுக்கு வேண்டிய ...
... யனுப்புவதற்கோ ...
...லைக் கவனித்து அதன்ப...
...ஸ்டல் ஆர்டர்களோ அ...
...கிறேன். (கிராமாந்திர...
...யால் மணியார்...

ஸ்ரீமதி லக்ஷ்மீ சங்கரய்யர்

லக்ஷ்மி என்கிற பெயரைக் கேட்டவுடனே இந்துக்களின் மனத்தில் தாம் பூஜிக்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மியின் நினைவும் பக்தியும் ஒரு மின்வெட்டுப் போல் தோன்றி மறைவதை உள்ளமறியும். அதே பெயரை இந்துக்களில் பெரும்பாலோர்கள் இட்டு அழைப்பதையும் காண்கிறோம். எந்தப் பெயர் வைத்தாலும் பெயருக்கும் அந்தப் பெயர் பூண்டவர்களின் ப்ரக்ருதிக்கும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுக்குப் பொருந்துவதே இல்லை. இது உலகமறிந்த விஷயம்.

எங்கோ சிலருக்கு அந்த அம்சம் பொருந்துகிறது. அவர்களில் நமது லக்ஷ்மியம்மாளைத் தாராளமாகச் சேர்க்கலாம். லக்ஷ்மியைப்பற்றி எழுதுவ தற்குமட்டும் நானே முன்வந்ததற்கு அந்தம்மாளும் நானும் பழகிய ஒரு அருமை என்னைத் தூண்டினதுதான்.

லக்ஷ்மியில் அஷ்ட லக்ஷ்மிகள் உண்டல்லவா ? நம்முடைய லக்ஷ்மியம்மாளிடம் சாந்தலக்ஷ்மியின் அம்சம். சில சமயம் வீர லக்ஷ்மியின் அம்சம். சில சமயம் தைரியலக்ஷ்மியின் அம்சம் குடிகொண்டிருப்பதை அவர் வசிக்கும் ஜில்லாவாசிகள் தவிர இதர ஜில்லாக்காரரும் அறிவர்.

பிறந்த வீடும் நிறைந்த அன்பும்

சந்தானலக்ஷ்மி, சம்பத்துலக்ஷ்மிகளும் அந்தம்மாளிடம் சக்தி செலுத்தி யிருக்கிறார்கள். அவர்கள் தற்காலத்து சில நங்கையர்கள் போல் உயர்தர படிப்பு படித்துப் பட்டங்கள் பெற்றவர்கள் அல்ல. சாமானியமான சில வகுப்புகள்தான் படித்தவர்கள். ஆடம்பரமான அலங்காரமோ! நவநாகரீக தடபுடல் சின்னங்களோ! அந்தம்மாளிடம் மருந்திற்கும் காணமுடியாது. கூந்தல் கொடி ஊனம் காக்கும், என்பது பழமொழி. அந்தம்மாள் எற் கெனவே நல்ல சிவப்பு, குண்டு முகம், அழகிய புன்னகையும் சாந்தியும் குடிகொண்ட தோற்றம். அழகிற்கு அழகு செய்ததுபோல் அவருடைய கருத்த நீண்டு அடர்ந்த கூந்தலின் அழகு ஒன்றே பிரமிக்கும்படியாக விருக்கும். அந்த இயற்கையழகிற்குமேல் செயற்கை யழகை அவர் சிறிதும் விரும்பவேமாட்டார்.

அவருடன் நாங்கள் பல ஊர்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்த போது, தான் பிறந்த கிராமத்திற்கு எங்களை அன்போடு அழைத்துச் சென்றார். அவ்வூரின் பெயர் தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. மிகவும் சிறிய குக்கிராமம். மிகவும் தாழமான சிறிய வீடு. நாங்கள் சென்றவர்கள் தாராளமாக உட்காரக்கூட இடம் இல்லை. ஒரே இருட்டு, "கோதை! இந்த வீட்டுலே தாண்டீ நான் பி[illegible]தேன்" என்றார்கள். தாழமானதும், இருண்

டதுமான வீட்டில் நீ லக்ஷ்மியவதாராமாகிவிட்டாய். அதனுல்தான் உயர்வாகவும் பிரகாசமாகவும் டாக்டரின் தர்ம பத்னியாகவும் தடபுடலாக இருக்கிருய். இதேபோல் மற்றவர்கள் இருக்கமுடியுமா?'' என்றேன். அந்தம்மாளின் நிலைமையும், பெருமையும் நன் மதிப்பும் உயர உயர, குணமும் பணிவும் தங்கக் கம்பிபோல் மெருகுடன் ஜ்வலிக்கின்றது.

கணவரின் முயற்சியும் கைம்மேல் பலனும்

டாக்டர் சங்கரய்யரின் தர்ம பத்தினியாக அவர்கள் வாய்த்தது அந்தம்மாளின் அதிர்ஷ்டமென்றே சொல்வேன். ஏனெனில் நன்ருகப் படித்த பெண்களையும் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர்களையும்கூடச் சில கணவன்மார்கள் அந்த கலைகளின் சிறப்பறியாது முதலில் கலையையும், அதன் எக்கத்தால் மனைவியையும் கொலை செய்துவிடுவதை நாம் கண்ணுல் பார்க்கிறோம். அருமையறிந்து விருத்தி செய்கிறவர்கள் வெகு சிலரேயாகும்.

நம் சென்னையில் கலியுக தன்வந்த்ரியாய் விளங்கிய டாக்டர் ரங்காச்சாரி எப்படியோ அப்படி திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீமான் சங்கரய்யர் ப்ரகாசிப்பவர். அவர் தனது முயற்சியினுலும் பழக்க வழக்கங்களினுலும் இதா சத்சங்கங்களில் பழகச் செய்ததனுலும் ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாளை வெகு திறம் படைத்த மேதையாகச் செய்துவிட்ட பெருமை அவருக்கே உரியதாகும். குளவி என்கிற ஒரு வகைப் பூச்சி, ஒரு சிறிய புழுவைப் பிடித்துவந்து தன் கூட்டில் அடைத்துவிட்டுப் போகும்போது ஒரு குட்டு வரும்போது ஒரு குட்டு இப்படியே குட்டிக்குட்டி புழுகிற்கு குளவியின் பயத்தினுல் குளவியையே எண்ணி இருப்பதில் குளவியின் நிறமே-உருவமே-அதற்குவந்துவிடுமாம்; அதனுல்தான் "குளவி தன்னிறமாக்குவதுபோல்'' என்கிற பழமொழியும் பிறந்திருக்கிறது. டாக்டர் தனது மனத்திலுள்ள ஆர்வத்தையெல்லாம் அந்தம்மாளுக்கு ஊட்டி அவளை தலைசிறந்த தலைவிகளின் பதவிகள் ஜாபிதாவில் சேர்த்துவிட்டார்.

ஏதேனும் ஒரு காரியத்தை சற்று பிறகு செய்கிறேன், என்று லக்ஷ்மி கூறினுல் டாக்டர் உடனே ஒரு போடுபோடுவார். "லக்ஷ்மீ! பேசுவது நீயா! உம்...உடனே கிளம்பு. முதலில் அதை முடித்துவிடு. எழுந்திரு... போய் வா''...என்று தாண்டி அன்புடன் அனுப்புவதை நான் நேரில் கண்டிருக்கிறேன். தம்பதிகளின் அன்பும் அன்யோன்யமும் சொல்லமுடியாது. தேனும் பாலும்போல் என்ருல் மிகையாகாது.

ஸ்ரீ. சங்கரய்யர் தன் முயற்சியில் வெற்றி பெற்றதோடு பெண்குலத்திற்கே வெற்றியைக் கொடுத்திருக்கிருர். சாதாரண கிராமத்துப் பெண்ணுக வளர்ந்த ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள், சில வருஷங்களுக்குள்ளேயே வீர லக்ஷ்மியாய், வித்யா லக்ஷ்மியாய் விளங்கினுள். தமிழ், ஆங்கிலம், சம்ஸ்க்ருதம், ஹிந்தி முதலிய பாஷைகளைப் பயின்ருள்.

சேவையில் ஆர்வமும் சிறந்த உழைப்பும்

டாக்டருக்கு மிகவும் அனுகூலமானதும் உதவியானதுமான நர்ஸாகவும் தேர்ச்சி பெற்ருள். தேசிய காரியமா...ஊம்...சளைப்பதில்லை. சுகாதார பிரசாரமா...சரி. முதல் தாம்பூலம் "இதா பொதுசங்கங்களா. ஒரு கை பார்க்கிறேன்...மாதர்களின் விஷயமா...காத்துக்கொண்டிருக்கிறேன்....ஊர் ஊராய் ஊழியர்களுடன் சுற்றுவதா லக்ஷ்யமில்லை. சிறைவாஸமா...வெகு ஆனந்தத்துடன் இதோ கிளம்பினேன்''...விருந்தினரை உபசரிப்பதற்கா... 'எள் என்பதற்குமுன் எண்ணெய்' என்கிற பழமொழி நிஜமாகிவிடும். ஹரிஜன சேவையா! இதோ! தயார்.

முதல் சந்திப்பும் முதிர்ந்த சிநேகமும்

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த லக்ஷ்மியம்மாளும் நானும், முதல் முதல் சந்தித்தது சென்னையில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்தகாலத்திலாகும். "நம்மைப்போன்ற சாதாரணமான ஒரு பெண்மணி கல்விடைக்குரிச்சியிலிருந்து எப்படி தைரியமாக வந்து சத்யாக்ரகப் போராட்டத்தை நடத்தி சிறைக்குச் சென்றாள்" என்று ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் வியந்ததை நானே நேரில் பார்த்திருக்கிறேன்.

அப்போது லக்ஷ்மியுடன் அதிகம் பழக அவகாசம் உண்டாகவில்லை. 1932-ல் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தில் அந்தம்மாளும் நானும் ஆறுமாத காலம் ஒன்றாக வேலூர் சிறையிலிருந்த ஆனந்த நாட்களை என்றுமே மறக்க முடியாது. எந்த நேரம் பார்த்தாலும், சம்ஸ்க்ருதம், இங்கிலீஷ், ஹிந்தி இந்த புத்தகங்களைப்படிக்கும் தரிசனத்தைத்தான் காணலாம். ஸ்ரீமதி S. அம்புஜம்மாளிடம் சம்ஸ்க்ருத பாடங்களைப் பரிசீலனை செய்துகொள்வதும் விருத்தி செய்வதும் நித்ய வேலைகளில் ஒன்றாகத் தவறாது நடத்துவார்.

சமையல் முறை வரும்போது அதை முதல்தரமாகச் செய்துமுடித்த பிறகுதான் மறு வேலை செய்வார். (எங்களுடைய சிறைவாஸத்தின் ஆனந்தத்தை எழுதவேண்டுமானால் ஒரு புத்தகமாக எழுதவேண்டுமேயன்றி இம்மாதிரி ஒரு குறிப்பில் எழுதி முடியாது) ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாளுடன் நான் பல ஊர்களுக்குச் செல்லவும், பிரசாரங்கள்செய்யவும் சமயம் வாய்த்தது. அக்காலையில் நானும் லக்ஷ்மியம்மாளும் ஒரு தாயின் வயிற்றுச் சகோதரிகள் போல் லயித்திருந்தோமேயன்றி அவர் திருநெல்வேலி ஜில்லாவாசி, நான் மதராஸ்வாசி என்கிற உணர்ச்சியே எங்களுக்குள் உண்டாகவில்லை.

சுற்றுப் பிரயாணமும் சொல்லொணு இன்பமும்

சுமார் 7, 8, வருஷங்களுக்குமுன்பு, ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள், அவர் கணவர் இருவரின் முயற்சியில் நாங்கள் 7, 8 ஸ்திரீகள் திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப்போயிருந்தோம். அதாவது, ஸ்ரீமதிகள் ருக்மிணி லக்ஷ்மீபதி, அம்புஜம்மாள், ஜானம்மாள், கல்யாணி சாஸ்திரிகள், காமாக்ஷியம்மாள், மங்களம்மாள், முதலிய பல சகோதரிகளுடன் சுமார் ஒருமாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்தோம்.

அக்காலை டாக்டர் தம்பதிகள் காட்டிய ஒரு அன்பும் ஆதரவும், தேசபக்தியின் வீர முழக்கத்தின் நாதமும், சொல்லவேமுடியாது. அந்த ஜில்லாவில் டாக்டர் தம்பதிகளுக்குள்ள செல்வாக்கையும், மதிப்பையுங்கண்டு நாங்கள் வியந்தோம்.

பிரசார சமயத்தில் பத்தமடை என்கிற ஊருக்குப் போகும்போது கக்ஷிகள்பேதப்பட்ட சிலர் எங்கள் வண்டியை வழிமறித்து பெரிய கலாட்டா செய்த சமயம் ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாளும், ஸ்ரீமதி அம்புஜம்மாளும் காட்டிய தைரியமும், வீரமும் சொல்லிமுடியாது. மகாத்மாவின் ஹிதோபதேசத்தை சிரசா வகிக்கும் உத்தம வழியைக் கடைபிடித்து சாத்வீகத்திலேயே அவ்வெதிரிகளை ஜெயித்து ஊருக்குள் போய் கூட்டத்தை நடத்தினர் என்றால், அந்தம்மாளின் தைரியம் எப்பேர்ப்பட்டது என்று சொல்லவேண்டுமா!

ஜஸ்டிஸ் கக்ஷித் தூணாகவிருந்த ஈச்வரம்பிள்ளையை வெகு சுலபமாக ஆயிரக்கணக்கான ஓட்டுக்களால் தோற்கடித்து வெற்றி மாலை சூட்டினர். பொதுத் தொகுதிக்கு ஒரு ஸ்திரீயை அபேக்ஷகராக நிறுத்தியது இதுவே

முதல் தடவை. சட்டசபையில் லக்ஷ்மியம்மாள் வீற்றிருக்கும் கம்பீரமே ஒரு தனித்த அழகாகவிருக்கும்; அங்கு தினம் வந்தேமாதா கீதம் பாடும் உரிமையும் அவரையே சார்ந்திருந்தது.

வாழைப் பழத்தில் ஏற்றிய ஊசி

ஒரு சமயம் நாங்குநேரியில் ஒரு கூட்டத்தில் பேசச் சென்றபோது ஸ்திரீகள் ஒருவருமே இல்லாதது கண்டு "சகோதரர்களே! இங்கு ஒரு சகோதரிகூட ஆல்லாததால் சம்பிரதாயப்படி சகோதர சகோதரிகளே என்று கூப்பிடும் சிரமம் எனக்கில்லை. இம்மாதிரி இல்லாது செய்ததுதான் எனக்கு விசனமாயும், வெட்கமாயுமிருக்கிறது. என்னையேதான் நான் சகோதரியே என்று சொல்லிக்கொள்ளவேண்டும்போல் இருக்கிறது. உங்களுக்கு மனைவிகள், சகோதரிகள், தாய்மார்கள், இல்லையா?...பெண்களையே புறக்கணித்துவிட்டு எந்த காரியத்தையும் தனித்துச் சாதிக்கலாம் என்று நீங்கள் இந்த இருபவதாவது நூற்றாண்டிலும் மனப்பால் குடிக்கின்றீர்களா!" என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் பேசி ஆண்களை இறக்கிவிட்டார்கள். அதே ஆண்கள் தொங்கிய முகத்துடன் கை தட்டிய கோஷம் அடங்க இரண்டு நிமிஷமாயிற்று.

ஆயிரக்கணக்கான கூட்டங்களில் பேசியும், பல சங்கங்களின் ஆண்டு விழாக்களுக்குத் தலைமை வகித்தும், புதிய சங்கங்களைத் திறந்து வைத்தும் மகாநாடுகளைத் திறந்து வைத்துப் பேசியும், கொடியேற்று விழாக்கள் நடத்தியும் சிறப்படைந்திருக்கிறார்கள். பல வருடங்கள் காங்கிரஸுக்குப் பிரதிநிதியாகவும், சாதாரண ஹோதாவுடனும் சென்றிருக்கிறார்கள். சட்டசபையில் காங்கிரஸ் கக்ஷிக் கொறடாவாகவும், சட்டசபைப் பிரதிநிதியாக அண்ணாமலை ஸர்வகலாசாலை மெம்பராகவும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

விருந்தோம்பலும் வீர வாழ்க்கையும்

கல்லிடைக்குறிச்சியிலுள்ள அவருடைய பங்களாவில் விஜயம் செய்யாத தலைவர்கள், தொண்டர்கள் பாக்கியில்லை. விருந்ினரை உபசரிப்பதிலும், கூட்டங்கள் நடத்துவதிலும் தம்பதிகள் சற்றும் சளைக்கவே மாட்டார்கள்.

காலதேச வர்த்தமானங்களை தினசரிப் பத்திரிகைகள் படித்து அறிவதில் சலிக்காத ஊக்கங்கொண்டவர். அதற்கேற்றபடியே தமது ப்ரஸங்கத்திலும் பொருத்தமாக விஷயங்களைக்கூறி ஜனங்களை உணர்ச்சி பெறச் செய்வார். பொது ஸ்தாபனங்களுக்கும் தேச கைங்கர்யங்களுக்கும் பணம் வசூலிக்கத் தியங்கமாட்டார்கள். பணம் வசூலிப்பது என்றால் லேசான காரியமா! எத்தனை வீடுகள் ஏறி இறங்கி எத்தனை மனிதர்களிடமிருந்து கிடைக்கும் வார்த்தைகளை வாங்கிக்கொள்ள நேரும். அவைகளையெல்லாம் லக்ஷியம் செய்யாமல் வெகு மகிழ்ச்சியுடன் உழைப்பார். கதர் விற்பதிலும் அப்படியே பின்னடையாது விற்பார்.

சகலவிதமான ஊழியத்திற்கும் சளைக்காத உழைப்பாளியான ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாளைப் பார்த்த சில பெண்பிள்ளைகள் "பிறந்தால் எங்க லக்ஷ்மியைப்போல் பிறக்கவேண்டும். எல்லோரும் எதற்குப் பிறப்பது?" என்று அவர்கள் ஜில்லாவில் கூறியதை என் காதால் கேட்கும்போது அத்தகைய லக்ஷ்மியை நமக்கு ஆப்த சிநேகிதையாக பகவான் அளித்தாரே என்று உள்ளம் பூரித்தது. அந்த தம்பதிகள் தம் மக்கள் மனிதர்களுடன் நீடூழி வாழவும் அவர்களது லக்ஷியம் ஈடேறவும் பகவானை ப்ரார்த்திக்கிறேன்.

— வை. மு. கோ.

சிறு கதை

என் மனைவியும் டெலிபோனும்

ஸ்ரீமதி பத்மாவதி

உலகத்தில் அநேக தினுஸுகளாகத் தம்பதிகள் அமைகின்றனர். எனக்கு மனைவியமைந்த அதிர்ஷ்டமேயதிர்ஷ்டம். என்மனைவி விமலா நல்ல குணமும் சோம்பலின்றி வேலை செய்யும் திறமையும் கொண்டவள். ஸாதாரண ரூபமுமுடையவள். குணமொத்து மனஸுக்கு இஷ்டமாக வாழ்க்கைத் துணைவி யமைவது பூர்வ புண்ணியமல்லவா? கொஞ்சம் பூர்வீகசொத்தும் உண்டு. ஆபீஸிலும் என் ஸம்ஸாரத்திற்கு வேண்டிய சொல்பசம்பளமே பெற்று வந்தேனாயினும் செல்வபதி என்றால் யாவருக்கும் விச்வாஸமே.

ஆபீஸ் வேலையினிமித்தம் எனக்கு ஒரு டெலிபோன் வைக்கப் பட்டிருந்தது. தனி வீடுதான் வைத்திருந்தேன். வேலைக்காரர் ஒருவரும் வேண்டாமென்று தானே எல்லா வேலைகளையும் செய்து வந்தாள் என் விமலா. காலைமுதல் மாலைவரையில் சற்றும் இளைப்பின்றி புன்சிரிப்புடன் வேலை செய்து என் வரவை எதிர்பார்த்திருப்பாள். அவள் கஷ்டப்படுவதைக்கண்டு சகியாமல், ஒரு சிறு பையனையாவது வேலைக்கு வைத்துக் கொள் என்று மன்றாடுவேன் அவள், "வேண்டாம் நமது வீட்டு வேலையை நான் செய்வது இளைப்பமா? ஏன் செய்யக்கூடாது? தேகம் திடமாக இருக்கிறது. கொஞ்சம் பொருள் கையில் சேர்த்துக்கொள்வது பிற்காலத்திற்கு நல்லதல்லவா? நாம் இருவர்தானே?" என்று இனிமையாக உரைப்பாள்.

பிரஸன்ன வதனம், சோம்பலில்லாத உழைப்பு இவைகளுடன் கொண்ட விமலாவுடன் வசித்து வரும்போது ஒருநாள் நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில் ஒரு வயதான ஸுமங்கலி உடலை எட்டு வளைவு வளைத்து ஒரு பெரிய பரிதாபக் கதையைக் கூறினாள்.

திக்கற்ற அனாதையான தனக்கு ஒரு வேலை கிடைத்தால் வயிறுபிழைக்க முடியுமென்றும் மிகவும் கஷ்டப்படுவதாகவும் கூறவே, நான் விமலாவைப் பார்க்க, விமலாவும் நகைத்தாள். அப்படி மன்றாடும் ஸ்திரீயை பாவம் விமலா வைத்துக்கொள்ளட்டும் என்று நினைத்தேன். அவள் சம்பளம்கூட வேண்டாம்; சாப்பாடுகிடைத்தால் போதுமெனவே, நானும் விமலாவை வற்புறுத்த அவளும் ஒருவாறு சம்மதித்தாள். அன்றே அம்மாது வேலை செய்ய ஆரம்பித்துவிட்டாள். நன்றாகவேசெய்து ஒத்தாற்போல் இருந்துவந்தாள். ஆபீஸிலிருந்து எனக்கு வேற்றூருக்குப் போக உத்திரவு கிடைத்தது. இதுவரையில் ஊர் செல்லும் வழக்கமில்லை. இச்சமயம் இவ்வுத்தரவு கிடைத்ததில் அம்மாது விமலாவுக்குத் துணை யேற்பட்டதை நினைக்க வெகு சந்தோஷமாகயிருந்தது. நான் விமலாவுக்கும், அம்மாதுக்கும் எச்சரித்துவிட்டுப் புறப்பட்டேன். வழியில் நெடு நாளாகப் பாராத சிநேகிதன் ஒருவனைச் சந்தித்தேன். அவன் விடாமல் பேசிக்கொண்டிருக்கவே ரயில் தவறிவிட்டது.

மறு வண்டிக்குச்செல்வதென்று தீர்மானித்துச் சற்று நேரம், தூக்கம் வர, படுத்தேன். நேரமாகிவிட்டதென்று அலறி எழுந்தால் கையில் இருந்த கைக்கடியாரத்தை யாரோ கழற்றிச் சென்றுவிட்டனர்; காணவில்லை. அது விலையுயர்ந்தது. அதனால் சற்று தயங்கி நிற்க, மறு வண்டியும் போய்விட்டது. சகுனம் சரியாயில்லை. மனஸும் ஸரியாயில்லை. ஆபீஸ் வேலையாகக் கட்டாயம் போய் தீரவேண்டும். வீட்டுக்குப்போய் மறுபடி திரும்பி வரலாமென்று வந்தேன்,

ஆஹா! என்ன சொல்வேன் ஆச்சரியத்தை! தெருவில் இரு போலீஸ் புலிகள். பிரமித்தேன். வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தேன். பின்புறமும் இரு புலிகள், ஒன்றுமே புரியவில்லை. "ஆ விமலா!" என்று கூவினேன். எனக்குண்டான சங்கையும், பதைபதைப்பும் சொல்லவும் வேண்டுமோ? மெல்ல அவர்களை என்ன சமாசாரம் என்று கேட்டேன்.

அவர்கள் என்னை ஒரு அன்னியனாக எண்ணி.'பேசாதே' என்றுவிரட்டினர். வீட்டின்கதவு திறக்கப்பட்டது. ஒரு மனிதன் கையில் ஒரு பெரிய மூட்டையுடன் விற்றென்று ஓடினான். பார்த்துக்கொண்டேயிருந்தேன். போலீஸார் அவனைப்பிடித்துக் கையில் காப்பை இட்டனர். இன்ஸ்பெக்டர் வந்தார். ஒரே குழப்பத்துடன் அவருடன் உள்ளே நானும் சென்றேன்.

கம்பத்தில் விமலா கயிறுடன் கட்டப்பட்டிருந்தாள். கண்களில்நீர் திறைய என்னைப்பார்த்தாள். விஷயம் என்னவென்று படபடப்புடன் அவளைக்கயிறு நீக்கிவினவினேன். பரிதாபம்! விமலா சாந்தமாக "ஆ! வேலைக்காரி என்று வந்தவள் பெண்ணல்ல. பெண் வேஷத்துடனிருந்த ஆண் திருடன், நீங்கள் சென்ற உடனே தெருக்கதவைத் தாளிட்டு திடீரென்று பிரமிக்கும்படி கொடூரப் பார்வையுடன் என் சாவியைக் கேட்டான். நான் என்ன செய்வேன்? பயமுறுத்தி என்னைத் துன்பப்படுத்துவதாகவும், பேசாதிருந்தால் பிழைத்தாயென்றும் கூறி சாவியைப் பிடுங்கி உள்ளே சென்று களவாடிக்கொண்டிருந்தான்...

இது என்ன விபரீதமென்று சடக்கென்று டெலிபோனருகில் சென்று "உடனே இன்ஸ்பெக்டர் வேண்டும். தாமதம் கூடாது. களவு" என்று கூறினேன். அவன் தன் உடையை மாற்றி சாமானுடன் வந்து, என்னைக் கட்டிப்போட்டுவிட்டான். நான் என் கணவருக்குச் சரியான பணிவிடை செய்து வந்தவளானல் என் பங்கில் கடவுள் இருந்து போலீஸார் வரக்கூடுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்....

நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்றாள். இன்ஸ்பெக்டர் விமலாவின் தைரியத்திற்குமெச்சி, அந்த சமயத்தில் குழப்பமின்றி அவ்வாறு செய்யத்தோன்றியதற்குமெச்சினர். அன்றுமுதல் எனக்கு ரொம்பபயம். பரிசோதனை செய்யாமல்வேலைக்காரனை வைத்துக்கொள்ளக்கூடாதென்று பேசிக்கொண்டோம். நல்ல எண்ணமும் உண்மையாகவும் கடவுளுக்குப் பொதுவாக வாழ்ந்து வருவோமானல், ஸர்வ சக்தியுடைய கடவுள் மறைபொருளாகவேயிருந்து நமக்கு எவ்விதமாகவாவது உதவி செய்கிறர் அல்லவா? இது செல்வபதியான என் விஷயத்தில் நிச்சயமல்லவா? என் மனைவிக்கும் எனக்கும் நேரவிருந்த ஆபத்தை நாகரீகக் கருவியாகிய டெலிபோன் தேவதை மூலமல்லவா கடவுள் நீக்கினர். இதே சந்தோஷம் என் மனத்தில் குடிகொண்டது.

ஞாபக மறதி

மனைவி:—என்ன! எப்பப் பார்த்தாலும் ஆபீஸ் கட்டுகளுடன் மாரடிக்கிறீர்கள்? மின்ஸார விசையில் எங்கேயோ கெட்டுப்போய்விட்டதுபோலிருக்கு, விளக்கே எரியமாட்டேங்கறதே. வெளிச்சமிருக்கும்போதே ரிப்பேர் செய்கிறவனைக் கூப்பிடுங்களேன்.

கணவன்:—வேலை செய்யும்போது தொந்தரவு செய்யாதே. விளக்கேத்துவதற்கு எலக்ட்ரீஷனைக் கூப்பிடுகிறேன். நீ முதலில் டேபில் விசிறியை கொஞ்சம் வை. வேத்து தண்ணியாப்போறது.

அதே கிராமத்திற்குத்தான் இப்போது யோகம் நிறைந்துவிட்டது. நீ இருக்கும் கிராமம், எப்படி இருக்கிறதோ தெரியாது. நானிருக்கும் கிராமம் சிறிய ஊர்; பத்து பனிரெண்டு வீடுகளுக்குமேல் இல்லை. அழகிய மலையும் அதனடியில் அற்புதமான குளமும் அடர்ந்த மரங்களும் இயற்கைக் காட்சியின் தோற்றம் ஆனந்தமாகத்தானிருக்கிறது. வேண்டிய வரையிலும் பரிந்து பரிந்து அன்பு தேங்கி ஆதரித்து உபசரிக்க ஆப்தமான மனிதர்கள், சுகமாகக்காலங்கழிக்க நல்லவசதியானவீடுகள், எல்லாந்தான் இருக்கின்றன.

ஆனால், இந்த ஆனல் போடாமலிருக்கமுடியவில்லையே. இயற்கையாக உண்டாகும் வெய்யில் எங்குந்தான் இருக்கிறது. அதைப்பற்றிக்கூட சொல்லமுடியாது, ஈயும் கொசுவும், மூட்டைப்பூச்சியும்கூட சில இடத்தில் உபத்திரவிக்கின்றது. அதையும் ஒருவாறு பொறுக்கலாம் பிடித்துவிட்டதுபோன்ற மனத்திற்குச் சாந்தி உண்டாவதுதான்வெகு ச்ரம மாகவிருக்கிறது. எப்போதும் ஏக்கம் பிடித்த தோற்றமும் சோர்ந்த முக மும் குடிகொண்டு விட்டது. பத்து குழந்தைகளுடன் இருக்கும் ஒரு குழந் தையைப் பிரித்தாலும் அது எப்படி இருக்குமோ, பத்து மாடுகளுடன் கொட்டிலில் ஆனந்தமாகவிருந்த மாட்டைப் பிரித்தால் அது எப்படித் தனிமை கண்டு தவிக்குமோ! அதை எல்லாம் நினைப் பூட்டிக்கொண்டிருக் கிறேன். நீயும் அதேபோலத்தான் இருப்பாய் என்று நினைக்கிறேன். என்று நமக்கு நல்லகாலம் பிறக்கும், என்று நாம் பழய நிலைமையை அடைவோம் என்று இப்போதே ஏங்குகிறது.

ஒருவரையொருவர் பிரிந்திருக்கும்போது சினேகிதர்கள் உறவினர்கள் இவர்களுடைய கடிதங்கள் தான் பெரிய ஆனந்தமாயும், மனச் சாந்தியாயு மிருக்கின்றன. நாம் தவிப்பதுபோல் எத்தனை கோடி மக்கள் தவிக்கிறார் களோ பாவம்...நீ பல ஜோலிக்காரி. இருப்பினும் கடிதம் எழுதச் சோம் பாதே. வாரம் ஒன்றாவது எழுது. ஏதோ பயித்தியம்போல் எழுதினேன் என்று சிரிக்காதே.

உன் பிரியமுள்ள,
கல்யாணி"

அன்பே உருவான கல்யாணிக்கு உபயக்ஷேமங்கள்.

அகத்திலுள்ள உணர்ச்சிகளை அப்படியே படமெடுத்துக் காட்டுவது போல் நீ எழுதியிருப்பதைப் படித்து இன்புற்றேன். என் மனக் கலக்கத் திற்கு உன் கடிதம் பேராறுதலாகவிருக்கிறது. "உனக்குத் தேவலை. சினே கிதியின் கடிதம் கண்டு களிப்பு உண்டாகியது. எனக்கு எழுதுகிறவர்கள் யாரிருக்கிறார்கள். செலவுக்குப் பணமனுப்பு என்று சகோதரியும், வட்டி பணம் கொடுக்கமுடியவில்லையே என்று கடன்காரனும் எழுதும் கடிதத்தில் நான்எத்தனை இன்பமடையமுடியும்"என்றுஎன் கணவர்பொறாமைப்படுகிறார்.

நீ பட்டினத்து நாகரீக வாஸத்தை விட்டு க்ராமத்து வாழ்க்கையை நடத்துவதற்குக் கூட நான் பரிதாபப்படவில்லை. 24 மணி நேரத்தில் குறைந்தது இருபது மணிநேரம். சங்கீதமும் உலகச் செய்திகளும் கேட்டுக் கொண்டிருந்த உங்கள் அருமை ரேடியோவைப் பிரிந்து எப்படித்தான் நீங்கள் இருக்கிறீர்கள் என்று ஆச்சரியப்படுகிறேன்.

கல்யாணி! சித்திரபானு வருஷம் வெகு நன்றாகத்தான் கழியும் என்று எனக்கோர் நம்பிக்கை உண்டாகியது. வருஷப் பிறப்பன்று வேப்பம் பூவும் வெல்லமும் மாங்காயும் சேர்ந்து புசிப்பதன் உண்மையை நாம் அடிக் கடி பேசுவோமல்லவா! "மனித வாழ்க்கையில் கசப்பு, புளிப்பு, இனிப்பு

மூன்றும் கலந்தே இருக்கும் அவைகளைப் பிரிக்கவே முடியாது'' என்ற தத்துவத்தைக் காட்டத்தானே பெரியார்கள் அந்த உத்தமமான பாகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நீ எழுதியதுபோல் நானும் பகவானை ப்ரார்த்தனை செய்தேன்.

அன்று புதிய கோடி உடுத்திக்கொண்டோம். எங்கள் கிராமத்திலிருந்து வெகு சமீபத்திலுள்ள ஒரு ஊரில் ப்ரபலமான கோயிலிருக்கிறது. வருஷப் பிறப்பன்று அந்த ஸ்வாமியைச் சேவிக்க வண்டிகள் கட்டிக்கொண்டு போனோம். ஆனந்தமாக ஸ்வாமிதரிசனமும் அம்மன் தரிசனமும் செய்துகொண்டோம்.

இரவு 8 மணிக்குமேலாகிவிட்டது. இரண்டு மைல் தூரம் வண்டியில் க்ராமத்திற்கு வரவேண்டும். அந்த பாதையில் நடுநிசிக்கு வந்தாலும் பயமே இல்லையாம். நாங்கள் இரண்டு வண்டிகளில் ஏறக்கூடிவர்கள் போக மிச்சமுள்ள ஆண்பிள்ளைகள் நடந்து வந்தார்கள்.

வெகு குசாலாகத்தான் வந்தோம். கெட்டது பட்டணம் சேரும் என்பது பழமொழி. ஆனால் தற்காலத்து நிலைமையில் ஜன நெருக்கடி பட்டினத்திற்குமேல் கிராமத்திலிருக்கிறதால் பல ரகத்து மனிதர்கள் சேர்ந்துவிட்டார்கள். நல்ல இருட்டுக் கருக்கல். கொஞ்ச தூரத்தில் வரும்போது சுமார் 10 பேர்கள் பரிபூர்ணமாகக் குடித்துவிட்டு தம்போக்காகப் பாடிக்கொண்டு வண்டிக்கெதிரில் வந்தார்கள்.

கல்யாணி! உண்மையில் அந்த நிமிஷம் என்னிதயத்தின் ஓட்ட வேகத்தை எழுதவே முடியாது. வண்டியை மடக்கி ஏதோ விபத்தை உண்டாக்கிவிடத்தான் போகிறார்கள் என்று நடுங்கிவிட்டேன். பகவத் க்ருபையால் அவர்கள் வண்டியையும், வண்டியில் கம்பீரமாக சாரத்யம் செய்யும் மிராசுதாரரையும் பார்த்துவிட்டுத் தாமாக வண்டிக்கு வழிவிட்டு விலகிச் சென்ற காக்ஷியின் உணர்ச்சி இப்போதும் மனத்தில் கொந்தளிக்கின்றது. அதே மனிதர்கள் வேறு ஆள் வண்டி ஓட்டுவதைக் கண்டிருந்தால் கட்டாயம் ஒரு விபரீதம் நிகழ்ந்தே இருக்கும்.

அந்த மிராசுதாரரின் செல்வாக்கும் இந்த கிராமத்தின் சுற்றுப்புறமுள்ள ஊர்களில் அவருக்குள்ள நன்மதிப்பும் ஏற்கெனவே தெரிந்திருந்தும் அன்று கல்லின்மேல் எழுத்து போலாயிற்று. இவ்விபத்தில் பகவான் காப்பாற்றினார் என்று மகிழ்ந்துகொண்டே சென்றோம்.

ஆகாரம் புசிக்கும் நேரத்திற்குமேல் அதிக தாமதமாகிவிட்டதால் ரிஷபராஜன்களுக்கு (வண்டி மாடுகளுக்கு) பசியின் வேகம் தலை தூக்கிவிட்டதால் பிடிக்கு அடங்காது இழுத்துக்கொண்டு வெகு வேகமாக ஓடவாரம்பித்தன. இந்த வண்டியிலிருந்த ஸாரதி எத்தனை சமாளித்தும் முடியாததால் ஏர்க்காலுடன் கயிற்றை அறுத்துக்கொண்டு எருதுகள் ஓட்டமெடுத்தன.

என்னே வேடிக்கை! வண்டி முதலில் மாடு பூட்டிய புறமாகவும் பிறகு தலை கீழாகவும் தடாரென்று விழுந்தது. அந்த விபத்திலும் ஒருவருக்கும் அடிபட விடாமல் கடவுள் காப்பாற்றினார். நாங்கள் வண்டியிலிருந்து ஒருவர் மேல் ஒருவராக உருண்டு கீழே விழுந்தோம். அதுவும் ஒரு தமாஷாகவே இருந்தது.

கூடவந்தவர்கள் மாடுகளுக்குப் பதிலாக கோவிந்தா கூச்சல் போட்டுக்கொண்டே வண்டியை இழுத்துக்கொண்டு வந்தார்கள். நாங்கள்

கிராம ப்ரவேசம்

ஸௌபாக்யவதி மங்களத்திற்கு அநேக ஆசீர்வாதம்,

க்ஷேமம், க்ஷேமத்திற்கு எழுதவும், சித்ரபானுவருஷம்ஆனந்தமாகப்பிறந்தது. நம்மெல்லோருக்கும் மங்களகாமாயும் சகல கல்யாணங்களுடனும் இவ்வருஷம்நடக்கவேண்டுமென்று பகவானைப்பிரார்த்தனை செய்தேன். பிரார்த்தனைஎன்னவோ எல்லா வருஷங்களிலும்தான் செய்கிறோம். இவ் வருஷத்தைப்போன்று நாம் பிரிந்து மூலைக்கொருவராகச் சிதறிக் கிடக்கும் பரிதாபமும், உலகம் கொந்தளிக்கும் பயங்கரப் புசல் காற்றும், எங்கு பார்த்தாலும் அபாயம்...ஆபத்து என்கிற அவச்சொல்லின் விகாரமும் நாம் கேட்டதேயில்லையல்லவா ? இவ்வருடத்தில் "இந்த விபரீத விபத்திலிருந்து தேசத்தையும் தேச மக்களையும் காப்பாற்று. ஆண்டவனே!" என்கிற புதிய பிரார்த்தனையும் சேர்ந்ததல்லவா! என்னைப்போலவே எத்தனை கோடி மக்கள் இதே பிரார்த்தனையை அந்த பகவானிடம் செய்திருப்பார்கள். 'பல துளி பெரு வெள்ளம்' என்பதுபோல் இத்தனை ஆத்மாக்களின் இதய பூர்வமான பிரார்த்தனைகளுக்கு என்னப்பன் கருணைமூர்த்தியாகிய ஸ்ரீபார்த்தஸாரதி—பாரத யுத்தத்தில் ஜெயக்கொடி நாட்டிய கீதாசாரியன்—மனமிரங்கி க்ஷேமத்தைக் கட்டாயம் தருவான். பரிதியைக்கண்ட பனிபோல் ஆபத்து விலகி ஆனந்தச் சூரியன் உதயமாகி வாடிக்கிடந்த தாமரைகளுக்கொப்பான மக்களின் இதய கமலங்கள் அழகாக மலர்ந்து இன்பக்கடலாடும் என்பதில் சந்தேகமே இல்லை.

மங்களம் !

சென்ற வருஷம் இதே சித்திரை வருஷப்பிறப்பன்று நாம் நமது ஸ்திரீகள் சங்கத்தில் என்ன கோலாகலமாக விழா கொண்டாடினோம். எலிப்பாழியாயினும் தனிப்பாழி என்பதுபோல் அவ்ரவர்களின் குடிசைகளில் அவரவர் மக்கள் மனிதர்களுடன் எத்தனை ஆனந்தமாக பண்டிகையை நடத்தி மகிழ்ந்தோம். சென்ற வருஷப் பிறப்பை நினைக்கும்போது, இவ்வருஷப் பிறப்பன்று உண்மையில் துக்கமே வந்தது.

எத்தனை குடும்பங்களில் தம் தம் மக்கள், மனைவி, பெற்றோர்கள். உற்றோர்கள், ஆப்த சிநேகிதர்கள் முதலியவர்களைப் பிரிந்து தனிவாசம் செய்கிறார்கள் ? நமது கால விதி என்று நாம் சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் சொல்லி த்ருப்தியடைகிறோம். தற்சமயமுள்ள நிலைமைக்கு என்னவிதமான வார்த்தைகளைச் சொல்லி திருப்தியடைவது சொல்லு பார்க்கலாம். எனக்கொன்றுமே தோன்றவில்லை.

"கிராமாந்திரங்களுக்குச் சென்று கிராமப் புனருத்தாரணம் செய்யுங்கள்" என்று மகாத்மா காந்தியடிகள் கூறியபோது சிலர் ஆமோதித்தார்கள். சிலர் வெறுத்துப் பரிகவசித்தார்கள். சிலர் "கிராமத்திற்காவது, மனிதர்கள் போகவாவது? மின்சார விளக்கும் விசிறியும், மோட்டார்காரும், பீச்சும், ஸினிமாக்களும், பாட்டுக்கச்சேரிகளும், ரேடியோவும், இதரஆனந்த கேளிக்கைகளும், கோயிலும், திருநாளும் விட்டுவிட்டுப் பட்டிக்காட்டில் எவன்இருப்பது?" என்று வாய் கூசாது சொல்லியதை நாம் கேட்கவில்லையா!

நல்லபடி நடந்துவந்து சேர்ந்தோம். ஒரு சிறிய அடிகூடப் படவில்லை. கல்யாணீ!

இதிலிருந்து என்ன தெரிகிறது தெரியுமா! "சித்திரபானு வருஷப் பிறப்பன்றே இத்தனை அமர்க்களங்கள் உண்டாகி உடனே சாந்தியும் சந்தோஷமும் நிலவியதால் இவ்வருஷத்தில் சிறிது கஷ்டங்கள் உண்டாகிய போதிலும் இறுதியில் நமக்கு சுகமும் சந்தோஷமும் கட்டாயம் உண்டாகும் என்கிற நம்பிக்கை மனத்தில் பதிவதற்காகத்தான் இச் சிறு சம்பவத்தைக் காட்டினார்'' என்று மன உறுதி உண்டாகியது.

நீ இருக்கும் கிராமத்தில் 10 வீடுகளாவது இருக்கின்றன. நானிருக்கும் கிராமத்தில் நான்கே வீடுகள்தான் இருக்கின்றன. அந்த நான்கு வீட்டிலுள்ள ஆண் பெண்களுக்குள்ள குணங்களின் அழகை வர்ணிக்கவே முடியாது. இதை நாம் நல்லகாலம் பிறந்து நேரில் சந்திக்கும்போது சொல்கிறேன். நான் ஒரு பூச்சியைப்போல் கிடக்கிறேன். நீ சொல்லியதுபோல் கடிதந்தான் சற்று ஆறுதலளிக்கிறது. நீயும் தவறாது போடு. நானும் தவறாது போடுகிறேன். நீ பொழுது போக்குவதற்கு என்ன செய்கிறாய் என்பதை எழுது. புதிய பக்ஷணம் கண்டுபிடித்தால்கூட செய்வதற்கு இல்லை. அவைகள் எல்லாம் நம் ஊர் போனபிறகுதான் செய்யவேண்டும். ஊரில் ஏதேனும் விசேஷமிருந்தால் எழுது. கிராம வாழ்க்கையின் அனுபவங்கள் முற்றும் நமக்கு ஒரு ரஸமான ஞாபகச்சின்னமாயமையுமல்லவா!

இங்ஙனம்,
உன் ஆப்த சினேகிதை
மங்களம்.''

அன்புமிக்க சகோதரி மங்களத்திற்கு உபயக்ஷேமங்கள்.

விசித்திரமான சித்திரபானு வருஷம் பிறப்பதற்கு முன்பே உங்களையெல்லாம் பிரிந்துவிட்டேன். தனிமை கண்டு கலங்குகின்றேன். ஆனால் ஒன்று. நீங்கள் பத்திரிகையில் படித்துத் திடுக்கிட்ட அபாயச் சங்கின் அலறலை நாங்கள் ப்ரத்யக்ஷமாகக் கேட்டு நடுநடுங்கி அதற்குண்டாகிய பல உணர்ச்சிகளுடன் அனுபவிக்கும் பாக்யம் பெற்றோம். சங்கு அலறுவதற்கு முன்பே ஊர் அந்தகாரத்திலாழ்ந்துவிட்டதானது நான் உங்களையும் மற்றவர்களையும் பிரிந்து மன அந்தகாரத்தில் தவிப்பதை நினைப்பூட்டியது. சங்கு ஊளையிட்டதும் ஷெல்டர்களில் எப்படிப் புகுந்துகொள்வது என்று நாம் முன்பு பேசிக்கொண்டு தமாஷாகச் சிரிப்போமல்லவா! அதை நிதர்சனமாக நான் நடத்தினேன். அப்போதெல்லாம் உன்னை நினைத்தேன். நீ க்ராமத்திற்கு ஓடுவதை நான் பரிகஸித்தேன். அதை நீ மறந்தாலும் நான் மறக்கமாட்டேன். எல்லோரையும் சொல்லும்பல்லிதான் போய்விழ மாம்காடிப்பானையில்'' என்கிறபழமொழி எனக்கே பொருத்தமாகிவிட்டது. என் மனமே என்னைக் குத்திக்காட்டுகிறது. தற்போது நாங்களும் கிராமத்திற்கு ஓடும் கதியைத்தான் அடையவேண்டும் என்கிற கட்டாயம் உண்டாகிவிட்டது. நீபோயிருக்கும் க்ராமத்தில் எனக்கும் ஒரு வீடு கிடைக்குமா என்பதைப் பார்த்து உடனே எழுது. தாமதம் செய்யாதே. உன் கடிதங் கண்டதும் நாங்கள் க்ராமப்ரவேசம் செய்கிறோம். பரிகஸிக்காதே. உன் கடிதத்தை வெகு அவசரமாக எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்:
உன் பிரிய
பானுமதி''

பி.ஸ்ரீ

• கையும் களவுமாய் •

(முதலாழ்வார் கண்ட கிருஷ்ணலீலை)

"என் வீட்டில் வெண்ணெய் திருடினான்; அவள் வீட்டிலும் திருடினான்; இவள் வீட்டிலும் திருடி உண்டான்" என்றெல்லாம் எத்தனையோ ஆய்ச்சிமார் குற்றம் சாட்டியபோதிலும், அந்தப் பெரிய ஆய்ச்சிமாத்திரம் கொஞ்சமும் நம்பவில்லை. ஏன்? அவளுக்கும் அது ஒரு சுமையாகத் தோன்றவில்லையே: ஏன் அப்படி?

தாயும் பிள்ளையும்

"என் மகனாவது; திருடுவதாவது! சுத்தப் பொய்! என் கண்மணியல்லவா? அவ்வளவு வெண்ணெய் உடம்பிற்குத்தான் ஆகுமா?" என்றெல்லாம் ஒரே அடியாகச் சொல்லிவிடுவாள். "கண்ணே! கண்ணா! நீ வெண்ணெய் திருடினயா? எப்படித்தான் உன்மேல் பழிசுமத்த மனம் வருகிறதோ?" என்று கொஞ்சுவாள். அவனும், "அம்மா! நானாவது; திருடுவதாவது! மோசம்; முழு மோசம்! அவர்கள்தான் திருடர்கள்!" என்று சிரித்துவிடுவான்.

ஒருநாள் யசோதையே பார்த்துவிட்டாள். "உன்னுடைய விரல்களிலும் வாயிலும்....அது என்ன? கிருஷ்ணா?" என்று கேட்டாள். கிருஷ்ணன் சிரித்தான். அவளுக்குத் தன் கண்களையும் நம்பாமலிருக்கமுடியுமா? "அப்படியா செய்தி? கிருஷ்ணா! உன்னைத் தண்டிக்கப்போகிறேன்" என்று அதட்டினாள். கிருஷ்ணன் அழுதான். 'என்னையா அம்மா. தண்டிப்பாய்?' என்று, "இவ்வளவு வெண்ணெய் சாப்பிட்டால், எப்படி ஜீர்ணமாகும்?" என்று சொல்லிக்கொண்டே பிள்ளையை உரலோடு சேர்த்துக் கட்டிவிட்டு அழுது கொண்டே போய்விட்டாள்.

அதுவும் ஒரு வேடிக்கையா?

அந்தப் பிள்ளையோ, "எனக்கும் ஜீர்ணமாகாதா? அம்மா!" என்று கத்துவதும் ஏங்குவதுமாயிருந்தான். அயல்வீட்டுப்பிள்ளைகள் வந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவனுக்கும் அது ஒரு வேடிக்கையாகவே யிருந்ததாம். உள்ளுக்குள்ளே கள்ளக் கிருஷ்ணனுக்கு வெட்கமேயில்லை. கொஞ்சம் முகம் வெளுத்திருந்ததும் வெண்ணெயினால்தான்!

இந்தக் கிருஷ்ணலீலையைப் பொய்கையாழ்வார் பின்வருமாறு பாடுகிறார்;

"விரலோடு வாய்தோய்ந்த வெண்ணெய்கண்(டு) ஆய்ச்சி
உரலோ(டு) உறப்பிணித்த நான்று,-குரல்ஓவா(து)
ஏங்கி, நினைந்(து) அயலார் காண இருந்திலையோ?
ஓங்(கு)ஓத வண்ணா! உரை."

[ஆய்ச்சி-(இங்கே) யசோதை. உறப்பிணித்த-சேர்த்துக் கட்டிவைத்த. நான்று-ஞான்று-பொழுது. ஓவாது-நீங்காமல். இருந்திலையே-இருந்தாயல்லவா? ஓதவண்ணா-கடல்போன்ற வடிவை யுடையவனே.]

திருட்டுமில்லை; பொய்யுமில்லை !

உண்மையில், வெண்ணெயை விரல்களால் அள்ளி யெடுத்து வாயில் போட்டுக்கொண்டபோதே, யசோதை கண்டு கள்ளனைப் பிடித்துக்கொண்டாளாம். அப்பொழுதும் அந்த வெண்ணெய் தோய்ந்த வாயினுலேயே, "நான் திருடவில்லை! திருடர்கள் அவர்கள் தான் !" என்றான் கிருஷ்ணன். "திருடியதோடு பொய்யும் சொல்லுகிறாயா ?" என்று ஒரு பெரிய உரலோடு கட்டினாள்,—'வெறுமனே கயிற்றினால் கட்டிவைத்தால் துஷ்டப் பிள்ளை அறுத்துக்கொண்டு போய்விடுவானே ?' என்று.

நெடு நேரம் ஏங்கி ஏங்கி அழுதான். அப்பொழுதும் "நான் திருடவேயில்லை; அம்மா! நான் பொய்யும் சொல்லவில்லை! அவர்களே திருடினார்கள் !" என்றுதான் கத்திக்கொண்டிருந்தானாம். "அதே சமயத்தில் இன்னும் எங்கே திருடலாம்? எப்போது திருடலாம் ?" என்றும் நினைத்துக்கொண்டிருந்தானாம்; திட்டம் போட்டுக் கொண்டிருந்தானாம்.

உடையவனும் உடைமையும்

அந்த நிலையில் எத்தனையோ பேர்கள் வந்து வேடிக்கை பார்த்தார்களல்லவா? எனினும் "நான் திருடவில்லை ; நீங்கள்தான் என் உடைமையைத் திருடுகிறீர்கள் !" என்றானாம், அவர்களிடத்திலும். அவர்கள் சிரித்தார்கள்: அவனுக்கோ அழுகை அழுகையாய் வந்தது.

உண்மைதானே; உடையவன் உடைமையை எடுத்துக்கொண்டான் ! எல்லாம் பகவான் உடைமைதானே ; உண்மையில் திருடன் யார் ? அவனா? அவனுக்கு உரிய ஆத்மாவையும் 'தமது' என்று அபிமானிப்பவர் திருடரில்லையா ? பொய்யரில்லையா ?

ஆழ்வார் கேள்வியும், அதற்கு விடையும்

ஆழ்வாரும் இந்தக் காட்சியைப் பார்க்கிறாராம். ஆனால் வேடிக்கையாகப் பார்க்கவில்லை. "கண்ணா! நீயும் களவு செய்ய வேணுமா? அதற்காக, ஐயோ, பாவம்! கயிற்றினால் கட்டப்பட்டாயா ? கட்டை அவிழ்க்கத் தெரியாமல் அழுதாயா ?" என்று பரிந்து கேட்கிறார். அவனோ, "நான் திருடினதும் இல்லை; ஆய்ச்சி என்னைப் பிடித்ததும் இல்லை; உரலோடு கட்டினதும் இல்லை!" என்று சாதிக்கிறானாம். பாட்டிலே வினா வெளிப்படை ; விடை குறிப்பாயிருக்கிறது.

உள்ளங்களைத்திருடும் கள்ளன்தானே கண்ணன். வெண்ணெய் போல் இளகி உருகக்கூடிய உள்ளங்களைத் திருடுவதிலும் விசேஷ விருப்பமுண்டு. அவ்வளவுதான். அந்தக் கள்ளனைப் பிடிக்கமுடியுமா ? கட்டமுடியுமா? பிறர் கட்டை அவிழ்க்கிறவனுக்குக் கட்டை அவிழ்க்கும் உபாயம் தெரியாதா? பக்திக் கயிற்றினால் தானே அவனைக் கட்டிவைக்க முடியும் !

"முழுப் பூசனியைச் சோற்றில் மறைக்கமுடியுமா? நீயே சொல்லு, கிருஷ்ணா !" என்று மறுபடியும் கொஞ்சிக் கேட்கிறார்

ஆழ்வார். 'இவை ஒன்றுமே நடந்ததில்லை!' என்று பதில் சொல்லுகி றானும், கள்ளக் கிருஷ்ணன்.

உண்மையினும் உண்மை: இவையெல்லாம் கவிஞர் பக்தர் முதலானவர்களின் கற்பனைதானே! காதலில் விளைந்த களவு: ஆம்; காதலில் விளைந்த கற்பனை. அவ்வளவுதான். ஆனால் இந்தக் கற்பனைக் களவின் பொருளாழம் கொஞ்சமோ?

நமது கை

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

ஒரே விஷயத்தைப்பற்றி ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவித அபிப்பிராயம் இருப்பதில் ஆச்சரியமில்லை. தர்க்க சாஸ்திரத்தில் தேர்ந்தவர்களானால், தங்கள் கட்சிதான் 'சரி' என்பதைப் பல அத்தாட்சிகளைக் கொண்டு சாதித்துவிடுகிறார்கள்.

'கடவுள் நமக்குக் கைகளை அளித்ததேன்? கைகளின் பயன் தான் என்ன?' என்ற கேள்வியைப் போட்டால், பலரிடமிருந்து ரஸமான பல விடைகள் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

'பகவானுக்கு அஞ்சலி செய்து பணிவதற்கே கைகளை நமக்குக் கடவுள் அளித்திருக்கிறார்' என்கிறார்கள் பரம பக்தர்களான சைவ வைஷ்ணவப் பெரியோர்கள்.

ஆனால் கள்ளனுடைய உள்ளமோ, கன்னக்கோல் பிடிப்பதற்கே தனக்குக் கடவுள் கைகளைக் கொடுத்து உதவி இருப்பதாகக் கருதுகிறது.

ஹிந்தி பிரசாரப் பத்திரிகையில் நான் ஒரு கட்டுரையைப் படித்தபின் மனிதவர்க்கத்திற்கு இன்றியமையாத அவயவம் 'கை' தான் என்ற எண்ணம் ஊர்ஜிதமாயிற்று. புதுமைக் கவிஞரான தேசிக விநாயகம்பிள்ளையவர்களும் 'கைத்திறன்' என்ற பாடலில் அவ்விஷயத்தை வெகு அழகாக எடுத்துப் பாடியிருக்கிறார்.

ஜீவராசியில் மிருகத்தன்மையைவிட்டு ஒருபடி உயர்வதற்கு முதல் அடையாளம், நாலு கால்களுள் முன்னங்கால்கள் இரண்டும் கைகள்போல் ஆகிவிடுவது. இரண்டாவது படியில் ஏறுவதற்கு அறிகுறி வாலின்மை. மூன்றாவது படிதான் பகுத்தறிவு படைத்தல்.

மனிதன் மிருகத்துடன் மிருகமாய்க் காட்டில் வசித்து வந்த போது நாலுகால்-பிராணிபோலதான் நடந்து வந்தான். பற்களே அவனுக்குக் கைபோல உதவி வந்தன. கைகளின் பிரயோஜனத்தைக் கண்டுகொண்டதும், தலை நிமிர்ந்து நடக்கலானான். கல்லை எடுத்துப்போட்டு மிருகங்களை ஜயித்தான்; கொன்று தின்றான். பின் அக் கல்லையே கூராக்கி ஈட்டிபோல உபயோகிக்கப்பழகினான். அதன்பிறகு பெருங்கிளைகளையும் சிறு மரங்களையும் பிடுங்கி எடுத்து,

அதைக்கொண்டு தன் ஆகாரத்திற்கான மிருகங்களை அடித்துக் கொல்லவும், தன்னைக் கொல்லவரும் மிருகங்களை அடித்து வெருட்டவும் கற்றுக்கொண்டான். இன்னும் இப்படியே முன்னேற்றம் அடைய அடைய, அக்கிளைகளையே வில்லாக வளைத்துக்கொள்ளவும், தூரத்திலிருந்தே மிருகங்களைக் குறி பார்த்துக் கொல்லவும் தெரிந்துகொண்டான்.

பல்லால் கிழித்துத் தின்று வந்த பச்சை மாமிசத்தைத் தீயிலிட்டுச் சுடவும், சுட்டதைக் கையால் எடுத்து நாஸூக்காக உண்ணவும் கற்றுக்கொண்டான்.

விதை விதைக்கவும், வேலி பின்னவும், மடை கட்டவும், மண் சுவர் எழுப்பவும், இவை போன்ற பல, இவன் கிரமமாகப் படித்து வந்த பாடங்கள்.

மிருக ஜாதியிலிருந்து மனித ஜாதிக்கு ஏறுவதற்கு இன்றியமையாத சாதனமாக மனிதனுக்கு உதவியது 'கை' என்பது நன்கு விளங்கவில்லையா? ஏன்? கண், காது, மூக்கு முதலிய அங்கங்கள் மட்டும் குறைந்தனவோ? அவைகளில் ஏதேனுமொன்றை முக்கியமாக ஏன் சொல்லக்கூடாது?

மூக்கும் காதும் தத்தம் இடத்திலிருந்தே வேலை செய்கின்றன. கண்ணும் இடம்விட்டு இடம் மாறாமல் அங்குமிங்கும் நோக்கி வேலை செய்கின்றது. 'கை' அப்படியில்லை. ஒரு சமயம் அது முன்னுக்கு நீளும்; ஒரு சமயம் பின்னுக்கு வாங்கும். இம்மாதிரி முன்னும் பின்னும், கீழும் மேலுமாய்ச் சுற்றிச் சுற்றி வந்து தன் வேலையை அது சுறுசுறுப்பாய்ச் செய்துவருகிறது.

நறுமணம் வீசும் மென்மலர்களைக் கொய்து மூக்கின் அருகே கொண்டு சேர்ப்பதும் கை. ருசியுள்ள தின்பண்டங்களை எடுத்து நாக்கிற்கு ருசி கொடுப்பதும் கை. உயர்ந்த இடத்திலுள்ள பொருள்களை எட்டி எடுப்பதும் கை. கீழே சிதறிக் கிடக்கும் வஸ்துக்களைத் தேடித் திரட்டி எடுப்பதும் கை.

கையினால் செய்ய இயலாத காரியமும் உண்டோ? பேனாவைப் பிடித்து உலகம் மெச்சும் காவியங்களை எழுதுவதும் கை. கலப்பையை பிடித்து உழுது காட்டு நிலத்தை விளை நிலமாக மாற்றுவதும் கை. மண் பாண்டங்களைச்செய்து தண்ணீர் மொண்டு உதவுகிறதும் கை. இன்னிசை ஒலிகளை வீணையில் எழுப்பி நமக்கு இன்பமூட்டுவதும் கைதான். ராட்டிலே நூலை நூற்று, நூலை ஆடையாக நெய்து மாந்தர் மானத்தைக் காக்க உதவுகிறதும் அவர் கை. வட்டில், பசித்த குழந்தைகளுக்கு சோறு இட்டு அள்ளி ஊட்டி விடுகிறதும் அன்னையின் கைதான். அழகான நந்தவனங்கள் பயிரிடுவதும் மலர்களைக் கொய்து மாலை கட்டி பகவானுக்குச் சாத்துவதும் அதே கைதான். ஆசாரியனின் சங்கு சக்ர முத்திரைகள் பெறுவதும் கை. அறுசுவையுண்டியை அருமையாகத் தயார்செய்து

பகவானுக்கும் பகவத் அடியார்களுக்கும் அளிப்பதும் கை. மங்கையர்கள் தினம் தம் பதியின் பாத பூஜை செய்வதும் கை.

குருடனுக்குக் கண்ணுவதும் கை. ஊமையோ கையினல் சாடை காட்டித் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளுகிறுன்.

மூக்குக்குத் துர்நாற்றம் சகிக்கமுடியாமல் இருக்கும்போதும், காதுகள் கடின மொழிகளைக் கேட்க விரும்பாத போதும், பயங்கரமான காட்சிகளைக் கண்கள் பார்க்க இயலாத போதும், கையே முன் வந்து அவைகளுக்கு உதவி புரிகிறது. கையினலாகும் உபயோகங்கள் கணக்கிலடங்காது.

கையைப்போல் சிறந்த பரோபகாரி உலகில் ஒன்று உண்டோ? ஒருவனுக்குக் கையில்லை யென்ருல் அவன் பிறர் உதவியைத் தான் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் எதிர்பார்த்திருக்கவேண்டும். மற்ற எந்த அங்கமும் அவனுக்குக் கை செய்யும் வேலைகளைச் செய்ய உதவுகிறதில்லை.

அரசன் செங்கோலைப் பிடிப்பதற்கும், போர் வீரன் வாளை உருவி நிற்பதற்கும் கைதான் வேண்டியிருக்கிறது. சிற்பி உளி கொண்டு அற்புத சிற்பங்களைச் செதுக்குகிறுன் தன் கையினலே. கருமான் இரும்புப் பூட்டையும் திறவுகோலையும் செய்து தருவதும் கைத் திறத்தினலே. கைத்திறம் படைத்த கொல்லன் பெரிய மாட மாளிகைகளையும் கோட்டைகொத்தளங்களையும் எழுப்புகிறுன். வண்ணுன் நம்முடைய அழுக்குத் துணிகளை வெளுத்துத் தருவதும் கையின் தயவினலேதான்.

ஆகாயத்தில் பறந்து செல்லும் விமானக் கப்பல், ஆழ்கடலில் மிதந்து வரும் மரக் கலங்கள், பாதையிலே ஊர்ந்துபோகும் வண்டி வகைகள், இவையாவும் மனிதனுடைய கைத் திறனைக் காட்டுவதற்கு ஏற்ற சாட்சிகளாக இருக்கின்றன.

கோபத்திலே மனிதன் கையை வீசி ஆட்டிப் பேசுகிறுன். அன்பை விளக்கக் கையினல் அணைத்துத் தழுவிக் கொள்ளுகிறுன். கடவுளையும் பெரியோரையும் தொழும் முறையும், பரஸ்பர வணக்கம் தெரிவிக்கும் முறையும் கைகூப்பி வணங்குதலே. பிறரை அண்டிப் பொருளை யாசிப்பதற்கும், பிறருக்கு தானம் வழங்குவதற்கும், கைதான் நீளவேண்டியிருக்கிறது.

அரைத் துணி நழுவ, நம்மை அறியாமலே அதைத் தூக்கிக் கட்டி விடுகிறது நம் கை. 'உடுக்கை (உடுத்த துணியை) இழந்தவன் கைபோல' உதவுகிறது நட்பு என்று கூறும் திருவள்ளுவரும் கையின் பெருமையைத்தான் உபமானமாக்குகிறுர்.

நம்மைப் பிறர் அடிக்க வரும்போது சட்டென்று முன்சென்று தடுத்து நிற்கிறது நம் கை. வாய் பேசாது வேறு வேலையிலிருக்க, கேட்ட கேள்விக்கு விடையளிக்கிறது கை. கண் பார்த்துக் கொண்டே இருக்க, சடுதியில் தன் காரியங்களை முடித்துப் போடுகிறது நம் கை.

இத்தகைய மாட்சிமை வாய்ந்த அங்கத்தைப் படைத்திருப்பதின் முக்கிய பிரயோஜனம் என்ன மனிதவர்க்கத்திற்கு? இத்தகைய பெருமை வாய்ந்த 'கை'க்கு உண்மையான அணிகலமாகக் கூடியது எது?—எப்பொருள்? அரசனுடைய செங்கோலா? போர் வீரனுடைய வாளாயுதமா? எழுத்தாளரின் எழுது கோலா? அன்றி, மங்கையர் பூணும் தங்க வளையல்களா? அன்று! அன்று! இவையல்ல அழகிய கைகளுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள்.

பசித்திருக்கும் ஏழை, எளியோருக்கு அன்னமிடுவது, அறப் பாதையை விட்டு வழுவி விழுந்தோரை கை தூக்கி விடுவது, இவை தான் நம் கைகளுக்கு உண்மையில் என்றும் சோபைதரும் அழியா அணிகலங்கள்.

ஆகையால் அன்புடையீர்! இந்தப் பயங்கரமான பிரளய காலத்தில், இந்த உலக யுத்தத்தின் பெரும் புயலின் மத்தியில் சிக்கி அல்லற்பட்டு, நான்கு பக்கங்களிலிருந்தும் பரிதவித்து ஓடிவரும் பல கோடிமக்களுக்கு, ஜாதிமத பேதம் பாராட்டாமல் அடைக்கலம் தந்து, அன்னம் அளிக்க முந்துங்கள். உங்கள் செம்மையான கரங்களை அந்த அரும் பணியில் உபயோகப் படுத்துங்கள்.

உடுக்க உடை கொடுத்துப் புசிக்க அன்னமளித்து ஆதரித்த பரந்த பாரத தேசம் இந்தப் புண்ணிய பூமி' என்ற பெயரை உங்கள் தாய் நாட்டிற்கு நிலை நாட்டுங்கள். உங்கள் தமிழ்த் தாயின் மூலம் உலகெங்கும் இதைப் பறைசாற்றுங்கள். நாம் மாண்டாலும், மாளா புகழுக்குப் பாத்திரமாவோம். பிழைத்திருந்தால் உலக நாயகன் அருளுக்குப் பொருளாவோம்.

8

அவ்வாறு மானஸீகமாக மனதாரத் துதித்தவண்ணம் அவ்வேங்கடவனின் கோயிலின் வாசல் வந்தடைந்தோம். பகவானை நினைத்தவாறு வருகையில் அப்பரம்பொருளிடம் அத்யந்த ப்ரீதி செலுத்தி ஐக்கியமாகிய பரம பக்தர்களைப்பற்றி நினைவு வருவது இயற்கைதானே? திருமலை ஏறும்போதே குலசேகராழ்வாரின் பக்திப் பெருக்கில் வெளியான தமிழ் செல்வத்தை நினையாதவர் உளரோ?

கோபுரவாசலையணுகும்போதேகுலசேகரர்பாடிய பெருமாள் திருமொழி,

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா ! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே.

எங்கள் வாயினின்றும் தானாக வெளிப்பட்டன. உள்ளே பிராகாரப் பிரதக்ஷணம் செய்யும்போது அவ்வானந்த நிலைய விமானம் கம்பீரமாகக் காலை வெய்யிலில் ஜ்வலித்துக்கொண்டிருந்தது.

ஸந்நிதியில் சேவையாவதற்கு இன்னும் சிறிது நேரமாகும் என்று தெரிந்ததால் உண்டியில் செலுத்தவேண்டிய காணிக்கைகளைச் சமர்ப்பித்துவிட்டு, முன் மண்டபத்தில் காத்திருந்தோம். அங்கு சந்நிதியின் வாசலில் தொங்கவிடப்பட்டிருந்த திரையின் அழகில் லயித்து நின்றிருந்தோம். அத் திரையில் வரையப்பட்டு 'ஜிகினு' வேலை செய்யப்பட்டிருந்த பகவான் பிம்பம் அதியாச்சரியமாயிருந்தது. திரையிலேயே இவ்வளவு அழகாகக் காட்சி கொடுக்கும் பகவான் உள்ளே எவ்வளவு கம்பீரமாய் ஜகஜ்ஜோதியாய் எழுந்தருளியிருப்பார் என்று தொன்றியது.

ஆழ்வார்கள் அருளிச்செய்த அம்ருத மொழியை அவரவர்க்கு ஞாபகம் வந்தபடி அச்சமயம் பாராயணம் செய்தோம். ஒவ்வொருவரும்,

வந்தாய் என்மனம்புகுந்தாய் மன்னி நின்றாய் !
நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பி !
சிந்தாமணியே ! திருவேங்கடம்மேய
எந்தாய்! இனியான் உன்னை என்றும் விடேனே.

என்றே பஜித்துக்கொண்டு இருந்த சமயம் சந்நிதியும் திறக்கப்பட்டது.

'கோவிந்தா! கோவிந்தா!' என்ற கோஷத்துடன் பயபக்தியுடன் உள்ளே சென்றோம். அங்கு கண்ட காட்சி—அத்திவ்ய தரிசனத்தை—விவரிப்பதென்பது இயலாத காரியம்.

எண் திசைகளும், ஏழுலகமும் வாங்கிப் பொன்வயிற்றில் பெய்து
பண்டு ஓராலிலைப் பள்ளிகொண்டவன் பால்மதிக்கு இடர் தீர்த்தவன்
ஒண்திறலவுணனுரத்துகிர்வைத்தவன் ஒள்ளெயிற்றொடு
திண்திறலரியாயவன் திருவேங்கடம் அடை நெஞ்சமே !

என்று திருமங்கை மன்னன் பாடியதில் ஆச்சரியமென்ன ? அல்லது,

உலகமுண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தியம்மானே!
நிலவும் சுடர் சூழொளிமூர்த்தி ! நெடியாய் ! அடியேனுயிரே !
திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே!
குலதொல்லடியேன் உன் பாதம் கூடுமாறு கூறாயே.

என்று பெரியாழ்வார், பாடியதில் அதிசயமென்ன ? அவ்வேங்கடவனின் பெருமையை நன்குணர்ந்தே திருமழிசை யாழ்வார் பின்வருமாறு பாடினர்:

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும்—வேங்கடமே
தானவரைவீழத் தன்னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை.

குத்துவிளக்குகள் பளிச்சென்றெரிய, கூட்டம் நிறைந்திருந்தும் நிச்சப்தமாயிருந்த அச் சந்நிதானத்தில் அர்ச்சகரின் குரல் கணீரென்று கேட்டது. கண்கள் பகவானை நோக்கியவண்ணம், செவிகள் அர்ச்சனையைக் கேட்ட வண்ணம், மனது பிரார்த்தனை செய்த வண்ணம், உதடுகள் அடைக்கல வார்த்தைகளை ஒலித்தவண்ணம், இவ்வுலக உபத்திர

வங்கள் சிறிதும் தோன்றாது நின்றிருந்ததை என்றும் மறக்கமுடியாது. அதுவும் அப்பரந்தாமனின் லீலைதான் என்று சொல்லவும்வேண்டுமோ ?

உளன்கண்டாய் நன்னெஞ்சே ! உத்தமனென்றும்
உளன்கண்டாய் உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்துமேயானும்
உள்ளத்தினுள்ளானென்று ஓர்.

என்று பொய்கையாழ்வார் அருளிச் செய்ததையும்,

உளன்கண்டாய் நல்நெஞ்சே ! உத்தமனென்றும்
உளன்கண்டாய் உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய்
விண்ணெடுங்கக்கோடுயரும் வீங்கருவிவேங்கடத்தான்
மண்ணெடுங்கத் தானளந்தமன்.

என்று பேயாழ்வார் அருளிச்செய்ததையும் மனதிற்குள் சொல்வது இயற்கை தானே. கற்பூர ஹாரத்தி நடக்கையில் எல்லோரும் மனங்கரைந்து, கண்களில் ஆனந்த நீர் வழியவும், மயிர் சிலிர்க்கவும், பணிந்து பணிந்து கைகளைக் குவித்தவண்ணம், "கோவிந்தா! வேங்கடவா! ஸ்ரீநிவாஸா! ஏழுமலையானே! ஜகந்நாயகா!" என்றெல்லாம் உரக்க பகவன் நாமஸ்மரணை செய்துகொண்டு எல்லோரையும் காப்பாற்றும்படியாக வேண்டிக்கொண்டோம்.

தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன் நுன்னைக் காண்பதோராசையினால்
வேயேய்ப்பூம் பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா !
நாயேன் வந்து அடைந்தேன் நல்கி ஆளென்னைக் கோண்டருளே !

என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தைச் சிலரும்,

ஊனேறு செல்வத்து உடற்பிறவியான் வேண்டேன்
ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கமிடத்தான் தன் வேங்கடத்து
கோனேரிவாழும் குருகாய்ப் பிறப்பேனே.

என்ற குலசேகராழ்வார் பாசுரத்தைச் சிலரும்,

மழையே ! மழையே ! மண்புறம்பூசி உள்ளாய் நின்று
மெழுகூற்றினாற்போல் ஊற்று நல்வேங்கடத்துள் நின்ற
அழகப் பிரானார் தம்மை என்னெஞ்சத் தகப்படத்
தழுவிநின்று என்னைத் ததர்த்திக்கொண்டு ஊற்றவும் வல்லையே.

என்ற ஆண்டாள்பாசுரத்தைச் சிலரும்பாடினார்கள். அருகிலிருந்த பெரியவர்

சென்னியோங்கு தண் திருவேங்கட முடையாய் ! உலகு
தன்னை வாழநின்ற நம்பீ ! தாமோதரா ! சதிரா !
என்னையும், என்னுடைமையையும் உன் சக்கரப்பொறியொற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே !

என்ற பெரியாழ்வார் பாசுரத்தைப் பாடினார்

சந்நிதியைவிட்டு வெளியே வர மனமே வரவில்லை. இருந்தாலும் வெளியில் கூட்டம் கூட்டமாக யாத்ரிகர்கள் காத்திருந்ததால், சிறிது நேரம் கழித்து திரும்பவும் வரலாமென்று வெளியே வந்தோம்.

செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே

என்று ஸ்ரீ குலசேகராழ்வார் பாடியதில் எனக்கு ஒன்றும் ஆச்சரியமே தோன்றவில்லை. 'எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே' என்றே பிதற்றிக்கொண்டு வெளிப் பிராகாரத்தில் உட்கார்ந்தோம்.

30

உருவம் மாறினும் உணர்ச்சி மாறுமா?

குழந்தைகளை அழ அழ அனாதை நிலையத்திற்குத் தூக்கிச் சென்ற பிறகு, காமுவையும் குட்டியையும் நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். காமுவே சற்று தைரியமாயிருக்கிறாள் என்று சொல்லலாம். குட்டி இடிந்துபோய் கேவலம் சவம் போலாகிவிட்டான்.

இருவரையும் ஒரே லாக்கப்பில்கூட வைக்காமல் தனித்தனியே போட்டுப் பூட்டிவிட்டுச் சேவகர்கள் காவல் புரிந்தார்கள். இராக் காலமாகையால் அப்போது எதுவும் நடக்கவில்லை. மறு தினம் காலையில் அந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து எல்லோரையும் பார்த்துக்கொண்டே தன் கச்சேரி அறைக்குப்போனார்.

காமு லாக்கப்பிலிருந்தபடியே அந்த இன்ஸ்பெக்டரை உற்றுக் கவனித்தாள். அவள் வெகு சிறிய வயதில் பார்த்த உருவமாகத் தோன்றியது; சரியாக நினைவில்லை. தன் இரண்டாவது அண்ணன் குருசாமியின் சாயலும் இருந்ததுகண்டு பிரமித்தாள். "இவன்தான் ஒரு வேளை தன்னுடைய மூத்த அண்ணனாகவிருக்குமோ?....வட இந்தியாவுக்குப் போய்விட்டதாகச் சொல்லியவன் இவன்தானோ?" என்று சற்று சந்தேகம் உண்டாகியது.

"மூத்த அண்ணனுக்கு ஒரு காலில் ஆறு விரல் இருக்கிறதென்றும், காதுக்குப் பக்கத்தில் மிளகு அளவு உருண்டையாகக் கருத்த மச்சமிருப்பதாயும் அடிக்கடி குருசாமியும் சோமுவும் சொல்லக் கேட்டதுண்டு. அம்மாதிரி இவனுக்கு இருக்கிறதாவென்று பார்க்க வேண்டும்; இவன் மறுபடியும் கண்ணுக்கு அகப்படுவானா!" என்று எண்ணமிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

வெகுநேரம் சென்று அந்த இன்ஸ்பெக்டர் அங்குவந்து புதிய கைதிகளைப்பற்றிய அங்க அடையாளம், விரல்மார்க்கு முதலியவற்றை எடுத்துக்கொண்டு அவர்களை அனுப்பினார். காமு அவனை உற்று உற்றுக் கவனித்தாள். காலில் பூட்ஸ் இருப்பதால் விரலைப் பார்க்க முடியவில்லை. காதுக்குக்கீழ் இருக்கும் மச்சம் அப்படியே தெரிந்ததும் அவளது சந்தேகம் பின்னும் அதிகரித்தது.

அவனைப் பார்ப்பதற்கு அசல் வடக்கத்தி ஆசாமியைப்போல் காணப்பட்டதேயன்றி தமிழ்நாட்டின் சாயல் மருந்துக்கும் இல்லை. வீட்டில் சிறியவனாகவிருக்கையில் சாமி என்று கூப்பிடுவார்களாம். பள்ளிக்கூடத்தில், ஆபீஸில் என்ன பெயரோ அது காமுவுக்குத் தெரியாது. இங்கு இன்ஸ்பெக்டர் கோகுல்பாபு என்று வழங்கி வருகிறது. தன் மூத்த அண்ணன் வெளியூருக்குப் போகும்போது காமுவுக்கு 7 வயதுகூட ஆகவில்லை. இப்போது சுமார் 20 வருஷங்

களுக்குமேல் அதே ஊரில் பழகியதால் சகலமும் மாறியிருக்கலாம் என்று எண்ணினாள்.

காமுவைப் பார்த்ததும் அவன் சிறிய வயதில் பார்த்த, ஓர் கனவில் கண்ட தோற்றமாகக்கூட நினைக்கவில்லை. முற்றிலும் புதிய மனுஷியைப்போல் பார்த்து விசாரணை செய்தானேயன்றி உண்மையில் அவனுக்குப் பழய நினைவு வரவேயில்லை. "ஆப்கா நாம் க்யாஹை?" என்று மறுபடியும் காமுவையே நேரில் கேட்டான்.

"காமாக்ஷி என்று பெயர். ஆனால் 'காமு, காமு!' என்றுதான் கூப்பிடுவார்கள்" என்றாள். 'காமூ...காமூ' என்று தனக்குள் கூறிச் சிரித்துக்கொண்டான்; பிறகு போய்விட்டான். அன்றே காமுவையும் குட்டியையும் பழய ஊருக்குப் போலீஸ் பந்தோபஸ்துடன் கொண்டுவந்தார்கள். அவளுடன் கூடவந்த சேவகனை விசாரித்தும் அந்த இன்ஸ்பெக்டரைப்பற்றிய தகவல் ஒன்றுமே புரியவில்லை. அவன் உண்மையில் வட-இந்தியக்காரன் என்றும் அந்த ஊர் பெண்ணையே மணந்திருப்பதாயும் நான்கு குழந்தைகளிருப்பதாயும் கூறினான். அவனைப்பற்றி தெரிந்துதான் என்ன லாபம்? தெரியாதிருந்துதான் என்ன நஷ்டம். இன்னும் கேட்டால் தெரியாமலிருந்தாலே நலம். பெரிய போலீஸ் உத்யோகஸ்தனின் சகோதரி கொலைகாரியாம். அவளைத் தானே கண்டு பிடித்துத் தண்டனை செய்தானும் என்று இளப்பமான வார்த்தை ஏற்படும். வீண் மனஸ்தாபம் உண்டாகும். தெரியாதுபோனதே உத்தமமாயிற்று' என்று காமு எண்ணினாள்.

குட்டி:—என்ன காமூ! இன்ஸ்பெக்டரையே உற்றுப் பார்க்கிறாய்! அவன் முகத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு உன் அண்ணன் குருசாமியின் சாயலாக இருப்பதுபோல் தோன்றுகிறது. அதையே எண்ணித்தான் நீயும் பார்க்கிறாயா!

காமூ:—ஆமாம். நானும் அந்த மனிதன் வந்தது முதல் பார்க்கிறேன். என் மனத்தில் ஏதோ சந்தேகமும், ஏதேதோ எண்ணங்களும் தோன்றி வதைக்கின்றன. இம்மாதிரியான ஒரு கஷ்டகாலம் வரப்போகிறது என்று யார் நினைத்தார்கள்? எனது சகோதரர்களைப் பார்த்து எத்தனை யுகங்களாகிவிட்டன. இனி நான் கனவில்கூட நினைப்பதற்கு ஆசை இல்லை. அவர்களுக்கு நான் சகோதரி என்று கூறினால்கூட உலகம் சிரிக்கும், எல்லாம் காலவிதியின்கோலம். என் அண்ணனைப் பார்க்காததுகூட எனக்கு அத்தனை கஷ்டமாக இல்லை. என் கமலாவைப் பார்க்காத ஏக்கமே எனக்குப் பெரிதாக இருக்கிறது. உம்...வீண் ஆசைப்பட்டு என்ன லாபம்?

குட்:—காமூ! உன்னுடைய இத்தனை கஷ்டத்திற்கும் காரணம் நான்தானே! இந்த பாவத்தை எல்லாம் நான் எத்தனை ஜன்மம் எடுத்தால்தான் தீர்க்கமுடியும், என் புத்தி எனக்கு ஸ்திரமாயிருந்து சாமியாரின் போதனைக்குச் செவி கொடுக்காதிருந்திருந்தால் இந்தவிதிக்கு இலக்காகியிருக்கவேண்டாமல்லவா?—என்று புலம்பினான்.

காமு அவனைத் தேற்றி தைரிய வார்த்தைகள் கூறி வைராக்யப் பாலை ஊட்டினாள்.

கொலைக்குற்ற விசாரணை என்றால் லேசில் ஆகக்கூடியதா! காமுவின் கேஸ் கீழ்க் கோர்ட்டின் விசாரணை முடிந்து, செஷன் ஸுக்கு மாற்றப்பட்டது. காமுவையும் குட்டியையும் வெளியூர் சிறைச்சாலைக்கு அழைத்துப் போகும்பொருட்டு ரயிலில் ஏற்ற அங்கு கொண்டு ஒரு ஓரமாக நிறுத்தினார்கள் அதே ரயில்வே ஸ்டேஷனில் பிச்சை எடுத்துக்கொண்டு உலாவிவரும் சோமு, தன் அருமை சகோதரி காமுவைக் கண்டதும் ஒரே துள்ளுதுள்ளினான்.

அவளையும் அவள் கணவனையும் போலீஸ் பாராவுடன் கைதியாக அழைத்துச் செல்வதைக் காண அவன் உள்ளம் சகிக்குமா! "எனக்கொருவிதமான சோதனை! என் சகோதரிக்கொருவிதமான விபத்தா!...ஐயோ! அவர்களை எதற்காகக் கைதியாக்கி அழைத்துச் செல்கிறார்கள். என் மனது துடிக்கிறதே. எதிரில் சென்று விசாரித்தால் ஒருவேளை என்னைத் தெரிந்துகொண்டால் என்ன செய்வது? என்னுடைய மானம்போய் பிராணனும் போய்விடுமே, என் கண்மணி கமலாவின் வாழ்வு...ஐயையோ...நினைக்கவும் பகீரென்கிறதே! இது சமயம் யோசனை செய்துகொண்டிருந்தால் காரியம் ஆகாது. என்னைச் சாதாரணமாக அடையாளமேதெரியாது...நான்விசாரித்தே வருகிறேன். ரயில் வந்துவிட்டால் காரியம் கெட்டு விடும் என்று எண்ணியவனாய் அந்தப்பக்கம் தயங்கித் தயங்கிப்போனான்.

காமு இவ்வுலகத்திலேயே இல்லாதவள்போல் ஒரே குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந்திருந்தாள்...சோமுவைக்கிட்ட அணுகவிடாது போலீஸார் தடுப்பது பெருத்த வேதனையாகவிருந்தது. எனினும் சோமு போலீஸ்காரனையே கெஞ்சிக் கும்பிடுபோட்டு அவன் உதவியுடன்,காமுவின் அருகில் சென்று, "அம்மணி! தாங்கள் சோமுவின் சகோதரி காமுவா? ..இதென்ன பரிபவம்!...சோமுவுக்கு இது தெரியுமா! எந்த சண்டாளர்களின் சதியினால் உங்களுக்கு இந்த துன்பம் வந்தது...என்னைத் தெரியவில்லையா! சோமுவின் வீட்டிற்குப் பக்கத்துவீட்டில் குடியிருந்த கோவிந்தன். என் தலைவிதி இம்மாதிரி கர்ம வியாதியால் அவதிப்படுகிறேன். அதனால் என்னை உங்களுக்குப் புரியாது"...என்று தானே முன்கூட்டி அடுக்கிக் கொண்டே போனான்.

காமுவுக்கு இவனைச் சற்றும் அடையாளங் கண்டுபிடிக்க முடியவேயில்லை. "தாங்கள் கோவிந்தனா!...அடாடா!...இப்படிப் பட்ட வியாதியா வந்துவிட்டது?...என் சோமு சவுக்யமா...கமலா, குழந்தைகள்சவுக்யமா! அவர்களை நீங்கள் எங்கேனும் பார்த்தீர்களா?

சோ:—அம்மணி! நான் யாரையுமே பார்க்கவில்லை. இந்தவிதமான சோதனையை பகவான் காட்டியபிறகு நான் யாரையும் பார்ப்பதில்லை என்று தலைமறைவாக வந்துவிட்டேன். அது கிடக்கட்டும். இதென்ன பரிதாபம்!....

காமு:—பரிதாபமொன்றுமில்லை. அனுதாபந்தான் படவேண்டும். எங்கள் வாழ்வைக் கெடுத்துக் குட்டிச்சுவரடித்த சாமியாரை நான் கொலை செய்துவிட்டேன். இவரும் அதில் சம்மந்தப்பட்டதாக இரு

வளையும்கைதியாக்கியிருக்கிறார்கள்.எங்கள் உடல்கள் தூக்குமரத்தில் ஊஞ்சலாடும் நன்னாளையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். தயவுசெய்து இந்த கோரமான விஷயத்தை என் அண்ணனிடம் சொல்லவேண்டாம். என் மன்னியும் அண்ணனும் இதைக்கேட்டால் உயிரையே விட்டுவிடுவார்கள். அவர்களுக்கு என்னால் எவ்விதமான ஆபத்தும் வேண்டாம்...விதியை மதியால் வென்றுவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கண்காணாத இடத்தில் சென்று மாறுவேஷம் பூண்டு வாழ்ந்தோம். ஆனால் விதியின் வலிமைதான் ஜெயித்தது. அதன் ஆதிக்கம் எங்களைக் கட்டிப்பிடித்து இழுத்துக்கொண்டு வந்து விட்டது...நீங்கள் போய்வாருங்கள்'' ....என்றாள்.

இதைக்கேட்கச் சோமுவின் இதயம் வெடித்து விடும்போல் குமுறுகிறது. அத்தனையும் மெல்ல சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு... ''அம்மணீ! இந்த விஷயம் உங்கள் மூத்த அண்ணன்களுக்குத் தெரியுமா!'' என்றான். இதற்குள் போலீஸ்காரன் பேசக் கூடாதென்று தடுத்துவிரட்டிவிட்டான்.

வெகு தூரத்தில் சோமுவைக் கொண்டு நிறுத்தி விட்டார்கள். இந்த தர்மசங்கடத்திற்குத் தான என்ன செய்வதென்றுதெரியாமல் விழித்தான்; புலம்பித் தவித்தான். தன்னுடைய கொடிய வாழ்க்கையேமேலாகப்போய்விடும்போலிருக்கிறதே. ''என்ன அநியாயம்! காமுவா செய்தாள்! காமுவா கொலைகாரி...அவளையா தூக்கிவிடுவது?...ஐயையோ! என்னருமைச் சகோதரி அனாதையாகிவிட்டாளே! என்ன செய்வேன்?'' என்று துடிக்கிறான்.

அதே சமயம் ரயில் வந்து காமுவையும் குட்டியையும் பேரிரைச்சலுடன் இழுத்துக் கொண்டு போய்விட்டது. அதற்கு

மேல் சோமு என்ன செய்வான் பாவம்! இதயம் தாங்கமுடியாத துன்பத்தினால் விம்முகிறது. "இதில் ஏதோ படுமோசமோ சூதோ இருக்கவேண்டும். காமு தன் கையால் ஒருபோதும் கொலை செய்தே இருக்கமாட்டாள். குட்டியைப்பற்றிச் சொல்லமுடியாது. அவன் செய்தாலும் செய்திருக்கலாம். இதற்காக இருவரும் சாவதா!...ஐயோ!...தூக்குமேடையில் தொங்குவதா! நினைக்கும் போதே தேகம் பற்றி எரிகிறதே. ஐயோ! இதுபரியந்தம் காமுவைப்பற்றி ஒரு தகவலும் தெரியாதிருந்ததால் அவள் சவுக்யமாக விருப்பதாக எண்ணி ஏமாந்தேன். இந்த பேராபத்தில் யாரைக் கொண்டு அவளுக்கு உதவி செய்யமுடியும்? என்று துடிக்கிறான். கட்டுக்கடங்காத காட்டுவெள்ளம்போல் சோமுவின் இதய உணர்ச்சி பொங்கி கண்ணீராய்ப் பெருகுகிறது.

31

வைராக்யப் பதுமையும் கைம்மேல் பலனும்

"என்னே அனியாயம்! என்னே துணிச்சல். என்னே பயங்கரம். உத்தமி என்றால் உலகமே ஒப்புக்கொள்ளும் மாணிக்கத்தை, தூய ஞானச்சுடரை, அப்பழுக்கற்ற அங்கனமணியை நெருங்கஉனக்குஎப்படியடாதைரியம்வந்தது? அடேய்!.... அடேய்!... த்ரோகி! உன்னைப்பெற்றபிதாவென்றெண்ணியிருக்கும் சீலவதியையா நீ கெடுக்க நினைக்கிறாய்?" என்று அவன் இதயத்திற்குள் ஏதோ ஒன்று கூறி அவன் உடலே நடுங்கும்படிச் செய்கிறது.

மனப் போராட்டத்தின் வேகம் தாங்காது ஒரு வினாடி பின்னுக்கு இழுக்கிறான். மறு வினாடி மன விகாரத்தின் வேகம் எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு நெருப்பின் தன்மையறியாது குளிர்ந்த சந்தனம் என நினைக்கும் முட்டாள்தனமாக முன்னால் தள்ளி இழுக்கிறது. சடக்கெனத் தீண்டவும் அங்கம் நடுங்குகின்றது.

'உடம்பு தெரியாது அயர்ந்து தூங்கும் கமலா எங்கே விழித்துக் கொள்வாளோ!' என்று ஒருபுறம் குலைக்கிறது. திருட்டுத்தனத்திற்கு நிம்மதியும் ஆலஸ்யமும் கிடைக்குமா! கமலா மெல்லியதாக விடும் ச்வாஸத்தின் ஸ்பர்சமே குருசாமியின் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து அவனை நிலை குலையச்செய்து உன்மத்தனாக்கிவிட்டது. தலைக்கேறிய வெறியுடன் கமலாவின் முகத்திற்குநேராக முகம் பதிக்கக் குனிந்த சமயம் கமலாவின் குழந்தை ஒருக்களித்துப் படுத்திருந்தது திரும்பிப் புரண்டு தாயாரைக் கட்டிக்கொண்டு படுத்தது.

அந்த நிமிடம் கமலா சடக்கெனக் கண்விழித்துக்கொண்டு குழந்தையை இழுத்து அணைத்துக்கொள்ளப்போகும் சமயம், தன்

முன்பு ஒரு உருவம் இருக்கக்கண்டு தீயை மிதித்தவள்போல் அலறியடித்துக்கொண்டு அப்படியே தலை நிமிர்ந்து பார்த்தாள். குருசாமியின் பிம்பம் மோக வெறிபிடித்த பார்வையுடன் நடுநடுங்கியவாறு தனக்குச் சமீபத்திலிருப்பதைக்கண்டதும் அவளால் நம்பவே முடியவில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டு, "யாரு... அண்....ணா... வா... ஹா... அண்....ணா!"...என்று தன்னைமீறிக் கத்தியவாறு வாரிச் சுருட்டிக்கொண்டுஎழுந்து விலகிநின்று..."அண்ணா...என் புருஷன் என்னைப் பிரிந்திருந்தாலும், என்னுடைய கற்பும், ஒழுக்கமும், சீலமுங்கூட மறைந்துவிட்டதாக எண்ணினீர்களா!...தாங்களா இம்மாதிரி செய்வது?"...

என்று பேசமாட்டாது கண்களில் நெருப்புப் பொறி பறக்க தேகமே பற்றி எரிவதுபோன்ற ஆவேசத்துடன் உடம்பு தள்ளாடித் துவளக்கூறினாள். குருசாமியின்பாடு நிலை குலைந்துவிட்டதெனினும் துராக்ருதமான எண்ணத்தின் வேகம் மட்டும் தணியவில்லை. அவள் அபலை, அவளைச் சரிப்படுத்திவிடலாம் என்கிற குருட்டு நம்பிக்கையும், முரட்டு தைரியமும், திருட்டு எண்ணமும் தலைதூக்கி நின்றதால், கமலாவின் வார்த்தைகள் காதில் ஏறவில்லை.

படபடத்த இதயத்துடன், "கமலா!...கமலா...என்னுடைய செய்கை மிகவும் கொடியதுதான் என்பதை நானே அறிவேன்... இருப்பினும்...என்னால் தடுக்கமுடியவில்லை. உன்னழகு என்னை மயக்கிப் பித்தனாக்குகிறது. நான் எத்தனையோ மாதக் கணக்காக சகிக்கமுடியாத வேதனையில் சாகிறேன்...கமலா! அவன் என்னவோ போய்விட்டான். இனி வரப்போவதில்லை. நீயோ சின்னஞ்சிறு....

என்று ஏதோ சொல்லிக்கொண்டு போவதைக் கமலாவால் கேட்டுச் சகிக்கவேமுடியவில்லை..."அண்ணா! நீங்கள் பெற்ற பெண்ணுடன் இம்மாதிரி அக்ரம வார்த்தைகளை நீங்களே சொல்வீர்களா! கடவுளறிய நான் உங்கள் பெண் என்றே இந்த நிமிடம்வரையில் எண்ணி இருந்தது முற்றிலும் ஏமாற்றமா!...ஏமாற்றமா!...ஐயோ! என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறதே....உங்களுக்கு நீதி, நியாயம், தர்மம் ஒன்றும் கிடையாதா! பெற்ற மகளைப் பெண்டாள நினைப்பதற்காகவா என்னைப் போஷித்து வருகிறீர்கள்? இச்செய்கை உங்கள் மனைவிக்குத் தெரிந்தால், என் கணவருக்கு இந்த சண்டாள விஷயம் தெரிந்தால், அவர்கள் உள்ளம் எப்படித்தான் தத்தளிக்கும்...என்ன பாடுபடும்? சற்று யோசித்துப்பாருங்கள்....

கணவனை இழந்த பெண்களையும்...விலக்கிய பெண்களையும் கெடுத்துக் கற்பை விழுங்கும் பூதங்களா நீங்கள்! மனிதர்களுக்குப் பயப்படவில்லை என்றால் கடவுளுக்கும் பயப்படவில்லையா! கடவுளையும் ஏய்த்துவிடமுடியுமா!...இதற்குத்தானா என்னை இங்கு அழைத்து வந்தீர்கள்? அண்ணா! என்னை வேசி என்று நினைத்தீர்களா! பதித்ரோகி என்று பார்த்தீர்களா!

கடவுளும் மனச்சாட்சியும் அற்ற மடையர்களை மகிழ்விக்கும் சண்டாளி என்று கருதினீர்களா!...என்னுடைய அழகு உங்கள் மூளையைக் குழப்புகிறதா? எனது அழகா!...என் பிராணவல்லபனைப் பிரிந்தபிறகுகூட என்னிடம் அழகு இருக்கிறதா! அத்தகைய அழகா எனக்குச் சத்ருவாகியது...? அழகா என் கற்பைக்குடிக்க எமனைத்தேடியது?...அழகா என்னைப் படுகுழியில் தள்ளக் குழி தோண்டியது!...அண்ணா! மோசம் போனேன்...முழு மோசம் போனேன்...எந்த அழகு என்னைக் காரணபூதமாக வைத்து இதுகாறும் உத்தமராகவிருந்த உங்களைச்சிதறவடித்துப் பாபாத்மாவாகச் செய்ததோ, அந்த அழகை, அந்த வசீகரத்தை, அந்த மித்ரத்ரோகி போன்ற சத்ருவை அழித்துக்கொள்கிறேன்...பிறகு இவ்வெண்ணத்தை விட்டுவிடுவீர்களல்லவா?...பிறகு என் சீலத்தைக் குலைக்க மாட்டீர்கள் அல்லவா?...

என்று ஆவேசத்துடன் கூறிக்கொண்டே ஓரே ஓட்டமாக வேருெரு அறையில் போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டாள். குருசாமியின்பாடு திண்டாட்டமாகிவிட்டது. "ஐயையோ! என்ன முட்டாள்தனம் செய்துவிட்டோம். தனியறையில் தற்கொலை செய்துகொண்டுவிடுவாளோ!" என்ற திகில் பிடித்துக்கொண்டதால் பழைய விகார உணர்ச்சி சடக்கென்று மாறிப்போய் கிலியும் பீதியும் கூறத்திறமற்ற பயங்கர உணர்ச்சியும் உண்டாகிவிட்டன.

கமலா சென்ற அறைக்கு ஓடிஞன். கதவு பட்டாரென்று சாத்திய சத்தம் கேட்டதும் எரிமலையே அவன் தலையில் புரண்டு விட்டதுபோல் ஒரு அதிர்ச்சி உண்டாகியது. தனது முட்டாள் தனத்தின் விபரம் எதுவரையில் போய் நிற்குமோ தெரியவில்லையே! என்று தவித்தவாறு "கமலா!...க்மலா!...கதவைத் திற"...என்று கெஞ்சினான்.

"கமலா சந்திரனுக்குச் சூட்டுக்கோல் பிரயோகம் செய்த வீரரமணி என்பதை அறியாத முட்டாளாக குருசாமியிருப்பினும், கமலா மகா மூர்க்கக்குணமுடையவளும் வைராக்கிய சித்தங் கொண்டவளும் ஆயிற்றே. எங்கே தற்கொலை செய்துகொண்டு தனக்குப் பேராபத்தை விளைவித்துவிடுவாளோ! உலகத்திற்குத்தான் என்னவிதமான பதில் சொல்லநேருமோ! எத்தகைய கொலைபாதகம் சாருமோ...தாயில்லாக்குழந்தைகளின் பாரம் தலையில் விழுமோ!" என்றதுபோன்ற பல பயங்கரக்கேள்விகள் அவன் இதயத்தில் அலை போல் மோதிப் புரண்டு முட்டி வதைக்கின்றன.

"கமலா! நான் உனக்கு மகத்தான துரோகத்தைச் செய்து விட்டதற்காக உன்னிடம் நான் மன்னிப்புக்காகப் பிரார்த்திக்கின்றேன். கதவைத் திற...உன் காலில் வேண்டுமாயினும் விழுகிறேன். என்னை விபத்திற்குள்ளாக்காது காப்பாற்று...கதவைத்திற. கமலா! கமலா!...நான் இனி கனவில்கூட உனக்குத் தீங்கு நினைக்கமாட்டேன்" என்று கத்துகிருன். கதவைப் பலமாக இடிப்பதற்கும்

பயப்பட்டு நடுங்குகிறான். எங்கே தன் பசங்கள் எழுந்துவிடு வார்களோ! வெட்கக்கேடான விஷயம் தெரிந்துவிடப்போகிறதோ! என்கிற பயத்தினால் மெல்ல இடிக்கிறான்.

கதவு திறக்கவில்லை. சந்தடியும் காணவில்லை. நிலையில் நிற்க முடியாது தத்தளித்த சமயம் அவனுடைய பெண் கண்ணை விழித்துக்கொண்டு தன் பிதா எங்கே என்று தேடிப் பின் "அப்பா! எங்கேப்பா போய்விட்டாய்? பயமாயிருக்கே. எனக்கு திடீரென்று வகமா குளுரு நடுக்குகிறது. மண்டையை உடைக்கிறது. வாப்பா!" என்று கத்தியது கேட்டுப் பின்னும் மனது இடிந்தவனாய் உள்ளே ஓடினான்.

குளிர் அந்தப் பெண்ணைத் தூக்கிப்போட்டு குலுக்குகிறது. கம்பிளிகளைப் போர்த்தும் துப்பட்டிகளைப் போர்த்தும் கெட்டியாக மூடி பிடித்துக்கொண்டும் குளிர் விடவிடவென்று உதறுவதால் இதைவிட்டுப் போகவும் முடியவில்லை. கமலாவைப்பற்றி அறியவும் முடியவில்லை. என்ன செய்வான்! இருதலைக்கொள்ளி எரும்புபோல் அவன் கதியாகித் தவிக்கிறான். தான் ஒரு உத்தமியின் உயிருக்கு உலைவைக்க எண்ணியதன் பலன்தான் இம்மாதிரி கைம்மேல் காட்டுகிறதோ! அந்தச் சண்டாளத்திற்கு பிரதிபலன் தன் மகள் இறந்துவிடுவாளோ! என்கிற பயமும், புத்திர வாத்ஸல்யத்தின் பாசமும் இதயத்தில் போராடுகின்றன.

"ஐயோ! அப்பா! என்னைக் கெட்டியா புடிச்சிக்கோயேன். என்னை என்னமோ பண்றதே!" என்று கத்துகிறது. குருசாமியின் மனது எப்படித்தான் துடிக்காது? அதற்கு ஓர் வரம்பு வைத்து எழுத முடியுமா! மகளைப் பார்ப்பதா! கமலாவைக் கவனிப்பதா! ஒன்றுமே தோன்றாது துடிக்கிறான். இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது.

32

விரக்திச் சுடரும் வியக்கும் மாறுதலும்

விசனத்திலேயே மூழ்கியவர்களுக்கு முற்றிலும் விரக்தியும் வெறுப்பும் அலாதியான தைரியமும் விரைத்த பார்வையும் ஏற்படுவது சகஜமல்லவா! அதேபோல் அசாத்யமான நோய் வந்து பிடிப்பவர்களுக்கும் வெறுப்பும் அதைரியமும் தோன்றுவதும் இயற்கையேயாகும்.

விபரீதமான குளிரும் தலைவலியும் பாதிக்கும் சிறுமி தனக்கு ஏதோ விபத்து வந்துவிட்டது. தன் சிறிய அன்னை இறந்துவிட்டது போல் தானும் இறந்துவிடப் போகிறோம் என்கிற பெரிய பீதியும் கவலையும் உண்டாகிவிட்டிதால் "அப்பா!... அப்பா!... அம்மாவை

வரச்சொல்லு...டாக்டரைக் கூப்பிடு.சித்தி எங்கே?....சித்தீ...சித்தீ என்கிட்ட வாயேன்...நீயுமா தூங்கறே!'' என்று கத்த வாரம்பித்தது.

இதைக்கேட்ட குருசாமியின் மனது எப்படித்தான் துடிக் காது. இன்ன செய்வதென்றே தெரியவில்லை. ஓட்டமாக ஓடி ''கமலா!...கமலா!...என்னை மன்னித்து இவ்வாபத்தான சமயத்தில் என்னைக் காப்பாற்றமாட்டாயா! கதவைத் திற கமலா!''...என்று கெஞ்சினன்.

கதவு திறக்கப்படவில்லை. குழந்தை எங்கே இறந்து விடுமோ! என்கிற மகத்தான பயமும் திகிலும் பிடித்துக்கொண்டன. தாயாரும் ஊரிலில்லை. குழந்தையைக் கவனிக்காது அநியாயமாய்க் கொன்றுவிட்டான் என்று தன்னை உலகம் தூற்றுமே. என்ன செய்வது என்று நெருப்பின்மீது புழுகெனத் துடித்தவாறு தனது 10 வயது மகனை எழுப்பி ''அடேய்! அக்காவிடம் உட்கார்ந்திரு. நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்'' என்று ஓட்டமாக வெளியே சென்றான்.

குழந்தையின் குளிரையும் நடுக்கலையுங் கண்டு இந்த சிறிய பையன் பயந்து நடுநடுங்கிப்போய் ஓவென அலறி அழுதவாறு கமலா படுக்கும் அறைக்குப்போய் பார்த்தான். அங்கு கமலா இல்லாது குழந்தைகள் மட்டுந்தான் தூங்கிக்கொண்டு இருந்ததால் ''சித்தீ! சித்தீ!'' என்று கத்தியவாறு வீடு பூராவும் அலைந்தான். மறுபடியும் ஓடிவந்து நோயாளியைப் பார்த்தான்.

குளிர் தூக்கித்தூக்கிப்போடுகிறது. ''அம்மா! அம்மா! அம்மா! ஐயோ...அப்பா!'' என்று துடிக்கும் சமயம் சொப்பன உலகத்தில் நடப்பவள்போல் கமலா தள்ளாடித் தடமாடியவாறு, குழந்தையிடம் வந்து அவளைத் தன் மடியில் எடுத்துவிட்டு நன்றாக அணைத்து கட்டிக்கொண்டு ''கண்ணு! அழாதேம்மா...ராஜாத்தீ! நான்தான் உன் சித்தி, பயப்படாதேடா கண்ணு! அப்பா டாக்டரை அழைத்து வரப்போயிருக்கிறார். இதோ வந்துவிடுவார். மருந்து கொடுத்தால் ஒரு நிமிடத்தில் குணமாகிவிடும். அழாதேடா ராஜா!''....என்று சமாதானம் செய்தாள்.

வெறும் கம்பிளியைப் போர்த்து அமுக்கிக்கொள்வதைவிட மடியில் வைத்து அணைத்துக்கொள்வதில் எவ்வளவோ ஆறுதலும் அனுகூலமும் உண்டல்லவா! அதோடு ஆண்பிள்ளைகள் குடத்தில் தண்ணீர்கொண்டு வருவதும், குழந்தைகளை வைத்துக் குலாவுவதும், இன்னும்சில காரியங்களைச்செய்வதும் பொருத்தமே இல்லாது வைத்துக் கட்டியதுபோலிருக்கும், அதிலும் குழந்தைகளிடம் சமாதானம் செய்து அணைக்கும்விதம் அவர்களுக்குப்பெரும்பாலும்கஷ்டமாகவே இருக்கும்.கமலாவின்மடியில் படுத்தவுடனே குழந்தைக்குத் தன்னையறியாது ஒரு ஆறுதலும், சாந்தியும் உண்டாகியதால் அவளைக் கட்டிக்கொண்டு ''சித்தீ! என்னைவிட்டுப் போகாதே. இங்கேயே இரு. இனிமே அம்மாகூட வேண்டாம்.. அப்பாகூட வேண்டாம்''

நீயே போரும். சித்தி...என்னைக் கட்டிக்கோ, என்னை விடாதே. என்று முழு நம்பிக்கையுடன் கூறியதுகேட்ட கமலாவின் புண் பட்ட மனத்திலும் ஒரு மின்வெட்டுபோன்ற சந்தோஷம் உண்டாகி குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு "கண்ணம்மா! பயப் படாதே. நான் உன்னைவிட்டுப் போகமாட்டேன்" என்ருள்.

அவள் தேகத்திலும் மனத்திலும் செய்யும் சங்கடத்தை அக் குழந்தை எப்படி அறியும்? கமலாவைப் பார்த்தவுடனே கூடவிருந்த பையன் முதலில் அலறிப்போய் "இதென்ன சித்தி!" என்று கத்தி ஞன். கமலா "உஸ்...படுத்துக்கொள்" என்று கண்ணாலேயே மிரட்டிப் படுக்கவைத்துவிட்டாள்.

பின்னும் சில நிமிஷத்திற்குள் குருசாமி 'டாக்டர் வரமுடியாது என்று மருந்துமட்டும் கொடுத்தனுப்பிவிட்டார்' என்று மருந்தைத் தூக்கிக்கொண்டு அலையக்குலைய ஓடிவந்தான். உள்ளே வந்ததும் அவன் கண்ட காக்ஷியை அவன் கண்களால் நம்பவேமுடியவில்லை. நெருப்பை மிதித்தவன்போல் துள்ளிஞன் "கமலா....கமலாவா!"... என்று நாக்குழற அலறிய அதிர்ச்சியில் கையிலிருந்த மருந்து நழுவிக் கீழே விழுந்து பாட்டல் சுக்கல் நூருக உடைந்தது.

அந்த பாட்டலின் சுக்கல்களைப்போல் அவன் இதயமும் சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறியது. "இதேபோலத்தான் கமலாவின் இதயமும் சிதறியதடா! மடையா! நன்ருகப் பார்த்துக்கொள்" என்று அந்தக் கண்ணாடித்துண்டுக்களே கூறி இடித்துக் காட்டுவது போல் சித்திரவதை செய்கிறது.

தன்னல் கமலாவின் நிலைமை எப்படியாகிவிட்டது என்ற பரி தாபத்தை அவனல் நினைத்துப் பொறுக்கவேமுடியவில்லை. கமலாவின் பயங்கரமான மாறுதல் ஸ்வரூபத்தைக் கண்டு யார்தான் கதிகலங்க மாட்டார்கள்? சற்று முன்பு சந்திர பிம்பம்போன்று ஜாஜ்வல்ய மாய் பிரகாசித்துக்கொண்டிருந்த முகம்....கமலா என்கிற பெயருக் கேற்ருர்போல் தாமரைக் கமலம்போல் விகசிதமுற்று சோபித்த அதே முகம், மேகத்தினல் மறைக்கப்பட்ட சந்திரனைப்போல் மறைந்துபோய் கன்னங்கறேலென்று விகார ஸ்வரூபமாகவிருப்பதை எந்தக் கொடும்பாவியால்தான் கண்டு சகிக்கமுடியும்?

'கூந்தல் கோடி ஊனங் காக்கும்' என்று பழமொழி கூறு வார்கள். அத்தகைய கூந்தல் முடியுடன் எப்படியோ மாயமாய் மறைந்திருப்பதோடு தாறுமாறுமாகக் கத்தரித்து ஸர்வகோரமாகக் காணப்படுகிறதை எப்படித்தான் பொறுக்கமுடியும்?

குருசாமி தன்னைமறந்து கோவெனக்கதறியபடியே "கமலா!"... என்ருன். மேலே பேசமாட்டாது, தொண்டையை அடைத்துக் கொள்ளும் துக்கத்தில் அப்படியே திக்குமுக்காடினன். கமலாவின் முகத்தில் அவளையறியாத ஒரு சந்தோஷம் தாண்டவமாடியது. இதயத்தில் ஞான வைராக்ய தீபச்சுடர் பளிச்சென்று பிரகாசிக்கும் அபூர்வமான சக்தியை அவள் முகம் தெளிவாக எடுத்துக்காட்டியது.

தைரியலக்ஷ்மியின் துணையும் அபயபிரதானரக்ஷணையும் கமலாவை பரிபூர்ணமாக ஸ்வீகரித்திருக்கும் விசித்திர ஜோதிச்சுடரை அவள் கண்களில் ஜ்வலிக்கும், அபாரமான சோபையிலிருந்து அறிந்து கொண்டான்.

ஆனல் கமலா வாய்திறக்கவில்லை. மௌனப் பதுமைபோல் அப்படியே குழந்தையின்மீது கவனமாக வீற்றிருந்தாள். மருந்து உடைந்துபோனதையும் குருசாமி கவனிக்கவில்லை. உடம்பே கிடுகிடென்று ஆடுகிறது. அருகில் குழந்தைகள் இருப்பதையும் குருசாமி மறந்தான். அயோமயமான நிலைமையில் தடுமாறிப்போய், 'கமலா!'...என்றான். அதற்குமேல் மறுபடியும் சில நிமிஷங்கள் வார்த்தை வராது துடித்துப் பின் சற்று சமாளித்துக்கொண்டு, 'கமலா!...என்னை க்ஷமிப்பாயா...என்னை மன்னிப்பாயா?' என்றான்.

கமலா தன்னை மறந்து கலகலவென்று சிரித்தாள். "அண்ணா! ஆண்டவன் எல்லோரையும் மன்னிக்கக் காத்துக்கொண்டிருக்கிறான். எந்த அழகும் வசீகரமும், உத்தம குணத்தையும், நீதி நெறியையும் குலைக்கச்செய்ததோ, அந்த அழகு செத்துப்போயிற்று. அதோடு அந்த விகார எண்ணமும் செத்துப்போயிருக்குமென்று நம்புகிறேன்" என்றுமட்டும் பேசிவிட்டுத் தலைகவிழ்ந்துகொண்டாள்.

குருசாமியின் உள்ளம் இந்நிமிடம் இருக்கும் தூய நிலைமையில் ஒரு உத்தம ஞானியைக்கூட வென்றுவிடுவான்போல விருந்தது. அதற்குமேல் அவனால் பேசவும் முடியவில்லை. கமலாவும் அவனுடன் தான்பேசுவது அதுவே கடைசி பேச்சென்று தனக்குள் சங்கல்பம் செய்துகொண்டாள்.

ஜெயாவும் தம்பியும் தூங்கி எழுந்து வந்ததும் தம் தாயாரை வீடெங்கும் தேட ஆரம்பித்தார்களேயன்றி கமலாவைக் கிட்ட அணுகக்கூட பயந்தார்கள். ஏதோ பிசாசோ பூதமோ வந்து விட்டதாக எண்ணி அலறினார்கள். கமலாவின் விதி செய்யும் விளையாட்டில் இதுவும் ஒன்றுபோலும். தன் குழந்தைகளைச் சமாதானம் செய்து தான் கமலாவென்று நிச்சயம் செய்வதற்குள் அவள் பாடு போதும், போதும் என்றாகிவிட்டது.

சூரலின் ஜாடையிலிருந்தும், பிறகு சற்று நிதானத்திலிருந்தும் நம்பிக்கையுண்டாகியதெனினும் கமலாவின் பையனுக்கு அவள்மடியில் உட்கார உள்ளூறபயமே நடுக்கியது. தன்னை நம்பிவந்த ஒரு உத்தமியின் வாழ்க்கையைத்தானே சிதறவடித்துவிட்ட பரிதாபம் குருசாமியின் இதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து சித்திரவதை செய்கிறது. தன் மனைவி ஊரிலிருந்துவந்தால் இந்த கோராமைக்குக் காரணம் என்னவென்று சொல்வாளோ! தன் பவிஷு என்னவாகுமோ! தன் குற்றத்தின் வெட்கக்கேடு எப்படித்தானுகப்போகிறதோ!" என்கிற திகில் அவனை வாட்டி அரைவாணாக்கிவிட்டது.

குருசாமி மனைவிக்குக் கடிதமே எழுதவில்லை. ஆனல் அவன் மகன், தன் சகோதரிக்கு ஆபத்து என்றும் கமலா சித்திக்குப்

பயித்தியம் பிடித்திருப்பதால் தலையைத்தானே மொட்டையடித்து விட்டாள் என்றும் குழந்தைத்தனமும் பயமும் கலந்த விபரீதக் கடிதம் எழுதி ஒருவருக்கும் தெரியாது போட்டுவிட்டான். அவன் மட்டும் தன் தாயாரின் வரவை எதிர்பார்க்கும் ரகஸியம் யாருக்குத் தெரியும். அந்தப் பையன், தான் கடிதம் எழுதியதாகக்கூடக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவன் முகம் மட்டும் தாயின் வரவை எதிர்பார்க்கும் ஆவலை வெளிப்படுத்தியது.

33

அபகாரத்திற்கும் ப்ரதி உபகாரம்

சாதாரணமாக வெளியூருக்குச் சென்றிருக்கையில் கடிதங்கள் வந்தால் நல்ல கடிதமாக இருக்கவேண்டுமே, ஒருவருக்கும் உடம்புஒன்றுமில்லாதுக்ஷேமம், என்று இருக்கவேண்டுமேயென்கிற ஒரு ஆவலும் எதிர்பார்ப்பும் சகஜமாக மனிதர்களுக்குள்ள இயற்கையான சுபாவம். அதேபோல் கடிதங்களிருப்பின் அதன் உண்மையான உணர்ச்சியை அனுபவித்து திருப்தி அடைவது உள்ளம்.

ஏதாவது ஏறுமாறான விஷயங்கள் கண்டுவிட்டால் அருகிலிருந்து அனுபவிப்பதைவிட ஆயிரம் மடங்கு அதிகரித்தவேதனையை தூரவிருக்கும்போதுதான் அனுபவித்து வருந்த நேரும். அதேபோல் பாலாம்பாள் தனக்குக் கடிதம் வந்ததும் ஆவலுடன் பிரித்துப் படித்து இடியோசை கேட்ட நாகம்போல் துள்ளினாள்.

"என்ன அக்ரமம்! கமலாவுக்கா பைத்தியம்! அவளா தலையை மொட்டையடித்துவிட்டாள்? கண்ணம்மாவுக்கு ஆபத்தான ஜுரமா!...ஐயோ! எல்லாம் இப்படியா, இச் சமயத்திலா நேர வேண்டும்? தன் மகளைச் சாகக் கொடுத்துத் தவிக்கும் கிழவிக்கு சற்று ஆறுதலாகப் பக்கத்திலில்லாமல் இம்மாதிரி ஆபத்துவந்துவிட்டதே!" என்று விசனித்தவாறு அன்றே கிளம்பிவிட்டாள்.

தனது தம்பியைத் துணைக்கழைத்துக்கொண்டு வீட்டிற்கு இவள் வந்ததை முதல் முதல் குருசாமிதான் பார்த்தான். இவளைப் பார்த்த உடனே திடீரென்று தூக்கி வாரிப்போட்டதோடு பேசவும் முடியாது ப்ரமித்துப்போனான். தனது கிராதகச் செயலைக்குறித்துக் கமலாதான் கடிதம் எழுதி வரவழைத்துவிட்டாளோ! இவளுக்கு உண்மை தெரிந்துவிட்டதென்றால் எப்படி தப்பமுடியும் என்கிற கவலை பிடித்துக்கொண்டு தத்தளித்த சமயம் பாலாம்பாள் வண்டியை விட்டு இறங்கியதும், "கண்ணம்மாவுக்கு எப்படியிருக்கிறது?... கமலா எப்படியிருக்கிறாள்?" என்று கேட்டாள்.

இதைக் கேட்கும்போது குருசாமிக்குப் பின்னும் தத்தளிப்பாகிவிட்டது. கமலாவின் ரகஸியம் அறிந்துதான் வந்திருக்கிருள் என்று தோன்றியது. முகத்தில் அசடு வழிகிறது. பதில் சொல்லவே தெரியாது விழித்தபடி "உள்ளே போ! டாக்டர் வீட்டுக்குப்போய் மருந்து வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று ஏதோ சமாதானம் சொல்லிக்கொண்டே போய்விட்டான்.

பாலாம்பாள் உள்ளே வரும்போது கமலாவே கண்ணம்மாவை மடியில் வைத்துக்கொண்டு கஞ்சியை மெல்ல வார்த்துக் குடிக்கச் செய்துகொண்டிருந்தாள். கமலாவின் கோராமையைக் கண்டதும் பாலாம்பாளைத் தூக்கி வாரிப்போட்டது. பாலாம்பாளைக் கண்டதும் கமலாவை அப்படியே ஒரு குலுக்கு குலுக்கியது. ஆனல் அதையவள் மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல் "மன்னீ! வாங்கோ! வாங்கோ! உங்களுக்கு எப்படி சமாச்சாரம் தெரியும். அண்ணு கடிதம் எழுதினுரா! கண்ணம்மாவுக்கு இப்போது நன்ருக குணமாகி இருக்கிறது. அவளுக்கு பயமே இல்லை...ஐயோ பாவம்! பாட்டி என்ன துடிக்கிருர்களோ அவர்களை விட்டுவிட்டு வந்தீர்களே! நான் பார்த்துக்கொள்ளமாட்டேனு! என்னிடந்தான் அவள் உயிராயிருக்கிருளே" என்று தானே எல்லாவற்றையும் முன்கூட்டியே சொன்னுள்.

பாலாம்பாளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கமலாவின் தோற்றம் அவளைக் கலக்குகிறது. அவள் பேசுவதும் மற்ற மாதிரியும் எப்போதும்போல் சர்வ சாதாரணமாகக் காணப்பட்டது. நிலைமை தடுமாறியபடியே "கமலா!....இதென்ன கண்ருவிக் கோலம்! உண்மையை ஒளிக்காமல் சொல்லு. என் வயிறு கொதிக்கிறது. நீ...

என்று இழுத்தாற்போல் முடிப்பதற்குள் கமலா சிரித்துக்கொண்டே "என்ன மன்னீ! நீ என்று இழுக்கிறீர்களே! நீ புத்தி ஸ்வாதீனமாயிருக்கிருயா! என்று கேட்கிறீர்களா! அதுதானே! கடவுள் கிருபையில் அம்மாதிரி சோதனை ஒன்றுமில்லை. உங்கள் ஆசீர்வாதத்தினுல் எப்போதும்போலவே இருக்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு உள்ளே ஏதோ சாமான் ஒழிக்கும்போது அக்னித்ராவகம் எப்படியோ என் முகத்தில் கொட்டிவிட்டது. அதற்குமேல் தேங்காய் எண்ணெய் தடவி இருக்கிறேன். அதோடு இன்னொரு வேடிக்கை. இரவு ஒரே கலக்கத்துடன் படுத்துப் புலம்பிக்கொண்டிருந்தபோது ஒரு சின்ன ப்ரம்மச்சாரியைப் போல் உருவம் என் கண்முன்பு தோன்றி "கமலா! இப்படி வீணுக அழாதே. உன் புருஷனுக்கு எந்த ஆபத்துமில்லை. அவன் நல்லபடி திரும்பிவருவான். உனது சிறிய வயதில் பழனியில் முடியிறக்குவதாக உன் தாயார் சொல்லிய ப்ரார்த்தனையைச் செலுத்தவே இல்லை. அந்த குற்றந்தான் உன்னையும் உன் கணவனையும் பிரித்து வைத்திருக்கிறது. முடியிறக்குவதற்குப் பதில் முடி கத்திரித்துவிடு. சரியாகிவிடும்" என்று சொன்னுர்.

பழனியாண்டவனே நேரில் சொல்கிறாப்போல் தோன்றிய தால் உடனே மறுதினமே கத்திரித்து உண்டிக்கு அனுப்பிவிட்டேன். வேறு ஒன்றுமில்லை. மன்னீ! பயப்படாதீர்கள். என் கணவருக்காக எனக்கு அழகுவேண்டும். அவரைப் பிரிந்திருக்கும்போது அழ கென்னத்திற்கு என்று ச்வாமியே செய்த வேலை இது. என்ன மன்னீ! அப்படியே நிற்கிறீர்களே!...என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

முழு பூசணிக்காயைச் சோற்றில் வைத்து மறைக்கும் ரகஸிய மும் சாகஸமும் ஒரு பாபமும் அறியாத பாலாம்பாளுக்கு எப்படித் தெரியும்? "கமலா!...நீ சொல்வது முற்றிலும் உண்மையா! அக்னி த்ராவகம் நம் வீட்டில் ஏது? எனக்குத் தெரிந்து இல்லையே. எப்படி உன் முகத்தில் கொட்டி முகத்தை இத்தனை புண்ணாக்குவதற்கு கிடைத்தது. உன் அண்ணாவைக் கேட்டால் தெரிகிறது. என் மனது நம்பமாட்டேன் என்கிறதே!" என்று கமலாவைத் தடவியவாறு முகத்தைப் பார்த்தாள்.

பார்க்கப் பார்க்க அவள் வயிற்றில் கூறத்திறமற்ற சங்கடம் செய்து வாட்டுகிறது. தன் குழந்தையைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் கூட மறந்துவிட்டது. வெளியில்சென்றிருந்த பாலாம்பாளின் மகன் ஓட்டமாக ஓடிவந்து "அம்மா! எப்ப வந்தே. என் கடிதாசி வந்ததா! அம்மா! என்னெ கோவிச்சுக்காதே. சித்தியே அன்னிக்கிப் பாத்த உடனே அசல் பயித்தியமாட்டமே இருந்தது. பயித்தியம் பிடித்ததனால்தான் இப்படி செய்துவிட்டாள் என்று பயந்துபோய் அப்பாவுக்குக்கூட தெரியாமல் இப்படி எழுதிவிட்டேன்.

அப்பறம் பாத்தா சித்தி ரொம்ப நல்ல சித்தியாவே இருக்கா! பழனி ஆண்டவன் வந்து மயிர் கேட்டாராப்; கத்தரித்துக்கொடுத் துட்டாளாம். அதுக்கப்புறம் எனக்கு பயமே இல்லேம்மா! கண் ணம்மாகூட சித்தியெ விடவேமாட்டேங்கிரா! நீ வராதிருந்தாகூட பயமில்லை. அப்பொ ஏதோ ரொம்ப பயமாயிருந்தது எழுதிவிட் டேன். கோவிச்சிக்காதேம்மா!" என்று தன் குற்றத்தைத் தானே ஒப்புக்கொண்டான்.

கமலாவைத் தடாரென்று சேவித்து "சித்தீ! என்னைக் கோவிக் காதே. முதல் முதல் நான் உன்னைப் பார்த்ததும் கட்டாயம் பயித்தி யந்தான் பிடித்துவிட்டது என்று பயந்தேன். அதனால் அம்மாவுக்கு அவசரப்பட்டு எழுதிவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்றான்.

இதைக்கேட்ட கமலாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அப்படியே அந்தச் சிறுவனைச்சேர்த்து அணைத்துக்கொண்டு அவன் தலையைத் தடவியவாறு "கண்ணா! உன் சித்தப்பாவைப் பிரிந்திருக் கும் நாள் வரையில் நான் பைத்தியந்தாண்டா ராஜா! இதனால் எனக் கென்ன கோவம்? சாக்ஷாத் சர்வேசனாகிய சிவபெருமானே பித்தன், சுத்தப் பயித்தியக்காரன் கங்காதரன் என்றெல்லாம் பெயர் பெற்றி

ருக்கும்போது என்னைச் சொன்னால் என்ன? ஒரு கோபமும் இல்லை" என்று கூறும்போது கண்ணில் தண்ணீர் முட்டியது.

பாலாம்பாளுக்குத் தாங்கவே முடியாது துக்கம் பீறிக்கொண்டு வந்தது. "கமலா!....உன்மனத்தில் தான் எத்தகைய வைராக்யத்தைக் கடவுள் அளித்திருக்கிறாரம்மா! நினைக்க நினைக்க நெஞ்சம் வெடித்து விடும்போலிருக்கிறது. உலகத்தில் கணவனால் வேண்டுமென்றே விலக்கப்பட்ட வாழாவெட்டிகள் கூட சற்றும் மனக்கவலையோ குழப்பமோ இன்றித்தம்மைதடபுடலாக அலங்காரம் செய்துகொண்டு மினுக்குவதில் பின்னடைவதில்லை. உன்னுடைய த்யாகமோ, காண்பவர்களை ப்ரமிக்கச் செய்கிறது. உனது பக்திக்கு பகவான் கிருபை பண்ணி சீக்கிரமே உன் கணவன் வந்து சேர்ந்து நீ தீர்க்க சுமங்கலியாய் சந்தோஷமாய் வாழவேண்டும். இதைவிட நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது" என்றாள்.

கமலா பதிலே பேசவில்லை. ஒரு சிறிதும் சந்தேகத்திற்கு இடங் கொடுக்கும்படி நடக்கவில்லை. குருசாமி மருந்து வாங்கிக்கொண்டு வரப்போகவும் இல்லை; ஒன்றுமில்லை. மனைவியின் முன்பு தன் கதி என்னவாகி விடுமோ! என்கிற பயத்தினால் ஓடிவிட்டான். வீட்டில் என்ன நடக்கிறதோ என்கிற பயம் வேறு பிடுங்கித் தின்றதால் உடனே வீட்டிற்கு வந்தான்.

அப்போதுதான் உள்ளே நடந்த சம்பாஷணையைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திக்ப்ரமை பிடித்து நின்றுவிட்டான். கமலாவின் அதி அற்புதமான குணத்தின் மேன்மையும் வைராக்யச் சித்தத்தின் மகிமையும் ஒன்றுகூடி அவனை அவள் காலில் விழுந்து வணங்கும்படியான பணிவையும் மனக்குழைவையும் கொடுத்தன.

இதுகாறுமிருந்த மதிப்பைவிட கமலாவிடத்தில் ஒருவிதமான பயமும் அவளைப் பார்ப்பதற்கே நடுக்கமுமாக ஒரு புதிய உணர்ச்சியும் தோன்றின. ஆச்சரியமிகுதியால் தேகம் சிலிர்த்தது. ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. "நம்மால்தானே இவ்வுத்தமியின் அழகு குன்றி விகார பிம்பமாகியது" என்று நினைக்கும்போது நெஞ்சு வெடித்துவிடும்போலாகிவிட்டது.

---

29. சுகுண பூஷணம் **4-ம் பதிப்பு.**

அற்புதத்தி ஆபத்தில் புகுத்தும், ஐயப்பாடு அவதியுறச்செய்யும், பொறுமை என்றும் பெருமை யளிக்கும், பக்ஷபாதம் பழிக்கச்செய்யும், உண்மைக் காதலே நன்மை பயக்கும், உத்தமநெறியே உயர்பெற்றோங்கும் முதலிய அருமையான விஷயங்கள் அடங்கிய துப்பறியும் நாவல். அணா. 4.

பச்சாத்தாபமும், பிராயச்சித்தமும்

நாட்கள் சில உருண்டோடிவிட்டன. கண்ணம்மாள் நன்ருகக் குணமாகி எழுந்த சந்தோஷம் நிலைப்பதற்குள் பாலாம்பாள் சறுக்கிவிழுந்து காலில் சரியான அடி பட்டு அப்படியே மூர்ச்சையாகிவிட்டாள். இசகு பிசகாய் விலாவில் வேறு அடிபட்டு உள்ளுக்குள் ரணங் கண்டுவிட்டதால் வெகு விரைவிலேயே பாயும் படுக்கையுமாய்விட்டதோடு நம்பிக்கைக்குறைவான ஸ்திதிக்கும் வந்துவிட்டது.

கமலா இமைகூடக் கொட்டாமல் இரவு பகல் அவர்களுடன் கூடவே இருந்து உழைத்தும் பலனில்லாது, அவள் மகாலக்ஷ்மியைப் போல் கிளம்பச் சித்தமாகிவிட்டாள். அப்போதும் பாலத்திற்கு தன் குழந்தைகளைப் பற்றியோ கணவனைப் பற்றியோ, சற்றும் கவலையோ, துக்கமோ தோன்றவில்லை. "கமலாவின் கதி யாதாகும்? அவளை இனி யார் கவனிப்பார்கள்? அவளுக்கு யார் ஆதரவு? அவளுக்காகவாவது நான் இன்னும் சில காலம் உயிருடன் இருக்கக் கூடாதா!" என்று எண்ணித் துடித்தாள். கமலாவைத் தடவிக் கொடுத்து அழுகிருளேயன்றி வாய் பேசமுடியவில்லை.

திடீரென்று வாயடைத்துப்போனதால் ஒரு பேச்சுக்கூடப் பேசமுடியாது ஊமைபோலானாள். அவளுடைய சங்கடமான நிலைமையில் அவளை பகவான் அதிக நாள் வைத்து ஆட்டவில்லை. உடனே அவள் பரிதாபத்திற்கு இரங்கி 'மஞ்சளும், புஷ்பமும், குங்குமமும், சந்தனமும் மணக்க மகராஜி, புண்யவதி, அவள் மாமியாரைப் போலவே அவளும் மகாலக்ஷ்மிபோல் கிளம்பிவிட்டாள்' என்கிற பட்டத்துடன் தன்னடி சேர்த்துக்கொண்டார்.

கமலாவின் கதி எப்படி இருக்கும்! கூறவேண்டுமா! பாலத்தின் மறைவால் உலகமே இருண்டு அந்தகாரமாகிவிட்டது. பாலாம்பாளை அவள் தனக்கு ஓர்ப்படியாக நினைக்கவே இல்லை. பெத்த தாய் போல் எண்ணியிருந்தாள். முன்பு அந்த விபரீதமான சம்பவத்திற்குப்பிறகே அவள் குருசாமியுடன் பேசுவதே இல்லை. தாயிக்குச் சமதையான மனுஷியும் மறைந்தபிறகு அவ் வீட்டிலிருப்பதற்கு அவள் உள்ளம் இடங்கொடுக்குமா!

தன்னுயிருக்குயிராய் பாவித்த பாலத்தைக் கொளுத்திவிட்டு வந்தபிறகு மூளையே கலங்கிவிடும்போலாகிவிட்டது. அழுது புலம்பித் துடித்தாள். பாலத்தின் மூத்த பெண்ணும் மருமகனும் வந்து சேர்ந்தார்கள். பல்லைக்கடித்துக்கொண்டு காரியம் ஆகும்வரையில் இருந்தாள். காரியங்கள் முடிந்ததும் கமலாவின் உள்ளம் துடிக்கிறது. பயமும் திகிலும் சித்திரவதை செய்கின்றன. தான் இனி அரைக் கணமும் இங்கிருப்பது சரியல்ல. பனைமரத்தடியில் நின்று பாலைக்

குடித்தாலும் கள்ளைக்குடித்ததாகத்தானே சொல்வார்கள் என்ற திகிலும் பயமும் கப்பிக்கொண்டன. அதே யோசனையில் மனது வெகு தூரம் குழம்பிப்போய் தான் வெளியேறவேண்டுவதுதான் உசிதம் என்று முடிவு கட்டிக்கொண்டாள்.

காரியங்கள் முடிந்தபிறகு அன்றே கமலா தன் குழந்தைகளின் துணிமணிகளை மூட்டைகட்ட ஆரம்பித்ததைக்கண்டு குருசாமியின் குடல் கொதிக்கிறது. அவனது மூத்த மகள் கமலாவை போகக் கூடாதென்றும் தன் பாட்டிதான் இனிமேல் இங்கு கூட விருந்து உதவி செய்யப்போவதாயும் அவளோடு கூட இருக்கவேண்டு மென்றும் சொல்லிப்பார்த்தாள்.

ஆனால் பாலாம்பாளின் தாயாருக்குக் கமலா இங்கிருப்பது முதலிலிருந்தே பிடிக்கவில்லை. அதைப்பற்றி பாலாம்பாளுக்கு ரகஸிய மாகக் கடிதமெழுதியதையெல்லாம் கமலா பார்த்திருக்கிறாள். அப்படிக்கிருக்க தன் மகள் இறந்தபிறகு இங்கிருப்பதை அந்தம் மாள் கனவிலும் விரும்பமாட்டாள். அது நியாயமும் இல்லை. ஏற் கெனவே தன்மீது துர் எண்ணங்கொண்டிருந்த மனிதன், மனைவியும் இறந்தபிறகு தன்னிடம் எப்படியிருப்பானோ! என்கிற பயம் உண் டாகிவிட்டது. ஆதலால் ஒரே பிடிவாதமாகக் கிளம்பிவிட்டாள்.

குருசாமிக்கு நெஞ்சில் பெரும் துக்கமலையே அழுத்துகிறது. கமலா தன்னிடம் பேசுவதையும் விட்டுவிட்டாள். அதோடு தன் மாமியார் முதலியவர்களின் முன்பு தான் எப்படிப் பேசுவது என்கிற எண்ணம் வேறு உண்டாகியது. சொல்லவுங்கூடாது மெல்லவுங் கூடாமல் தத்தளித்தான்.

கமலா தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். பாலாம்பாளின் குழந்தைகளையெல்லாம் கட்டிக்கொண்டு முத்த மிட்டுப் பின் கண்ணீர் பெருக "நான் போகிறேன்" என்றாள். பசங் களில் சற்று புத்தி தெரிந்தவர்கள் "எங்கே போறே சித்தீ! சித்தியா தான் எங்கேயோ போய்விட்டாரே" என்று கேட்டார்கள்.

கமலாவின் துக்கம் கரைபுரண்டது. இந்த பரந்த உலகத்தில் இந்த மூன்று ஆத்மாக்கள் வசிக்க பகவான் இடங்கொடுக்காமலா போவார்! அவரை நம்பிப்போகிறேன்; அவர் இடங்கொடுத்துக் காப் பாற்றுவார்" என்று கூறிவிட்டுச் சடக்கெனக் கிளம்பி நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றாள்.

தான் எங்கு செல்வது, யாரிடம் ஒண்டிக்கொண்டு பிழைப்பது என்று எண்ணித் தவித்தவாறு ஒரு தனித்த இடத்தில் குழந்தை களுடன் உட்கார்ந்திருந்தாள். இன்னும் முக்கால்மணிக்குமேல்தான் ரயில்வரும் என்று தெரிந்ததால் விதியை எண்ணிக் கண்ணீர் உதிர்த்த வாறு ஆகாயவெளியை நோக்கிக்கொண்டிருந்தாள்.

குழந்தைகள் கீழே கிடக்கும் பறுக்காங்கல்லைஎடுத்து ஒருவருக் கொருவர் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் குருசாமி கண்ணீர்வழிய அங்கு கமலாவின் முன்புதோன்றி "கமலா... கமலா!"

என்று தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் கூப்பிட்டவாறு தன்னை மறந்து அவளை நமஸ்கரித்து, 'கமலா! என்னை மன்னிப்பாயா! எனது அல்ப ஆசையின் துராக்ருதம் எத்தனை தூரம் எனக்குப் புத்தி புகட்டி என்னை சரியான தண்டனைக்கு ஆளாக்கிவிட்டது. எந்த ஒரு அல்ப ஆசைக்காக நான் எனது நீதியை-கடமையை-சத்தியத்தை மறந்து படுகுழியில் விழத் துணிந்தேனோ, அதன் பயன்தான் எனது கிருகலக்ஷ்மியை விழுங்கிவிட்டது. உத்தமியாகிய உன் இதயத்துடிப் பின் சாபம் என்னை நிரந்தர சன்யாசியாகச் செய்துவிட்டது.

ஆண்டவன்மீது ஆணையாக நான் இனி கனவிலும் ஒரு தீங்கும் நினைக்கமாட்டேன். நீ தன்னந்தனியாகப் போகவேண்டாம். வீட்டிற்கு வந்துவிடு. என் மனது தாங்கவில்லை. வெடித்துவிடும்போல் இருக்கிறது. எழுந்து வா! கமலா!... சத்தியமாக உன்னை என் ஞான குருவாக நான் நினைக்கிறேன். என் இதயத்தில் படிந்து கிடந்த மாசை அகற்றி அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானதீபத்தை ஏற்றிய ஞானகுரு நீதான். சத்தியமாக என் ஞானகுரு நீதான். என்னை மன்னித்து, வீட்டுக்கு வா"...என்று முற்றுப்புள்ளி வைக்காமல் சொல்லிக்கொண்டே போகிறான்.

கமலாவுக்குச் சற்று சந்தேகமாகவே இருந்தது. தன்னைக் காண கட்டாயம் குருசாமி வருவான் என்று அவள் மனத்தில் மட்டும் ஏதோ ஒன்று சொல்லியது. அதேபோல் அவன் வந்ததால், எதிர்பார்த்த சம்பவமாகையால், அவளுக்குப் புதிய அதிர்ச்சிஒன்றும் உண்டாகவில்லை. எந்தவிதத்திலாவது ஒரு மனிதனின் புத்தி சரியாகத் திருந்தி தான் செய்த குற்றத்திற்கு, பாபத்திற்குத் தானே வருந்துவானுனல் அதுவே அவனுக்குத் தக்க தண்டனையாகும். "சட்டத்தின்பேரால் பிறர் விதிக்கும் தண்டனையைவிட தன் குற்றத்திற்குத் தான் வருந்துவதுதான் உண்மையான தண்டனை" என்கிற தத்துவத்தையுடையவளாதலாலும், பிச்சைக்காரியை இகழ்ந்து சுருக்கெனப் பேசியதால்தான் தனக்கு இக்கதி வந்தது என்பதை சதா உணர்ந்து அனுபவிப்பவளாதலாலும் அவளுக்கு குருசாமியின் மாறுதலில் எத்தகைய அதிர்ச்சியோ ஆச்சரியமோ உண்டாகவில்லை.

எனினும் பழயபடி அவனுடன் வசிக்க அவள் விரும்பவே இல்லை. அவனை வணங்கிப் பின், "அண்ணு! எல்லாம் காலச் சக்கரத்தின் கோலம். தாங்கள் இத்தகைய மாறுதல் அடைந்ததற்காக நான் மெத்த சந்தோஷத்தை அடைகிறேன். நீங்களும் இனி வைராக்யக் கொழுந்தாகவிருக்கலாம்; நானும் ஞானச்சுடர்விளக்காய் இருக்கலாம். நெருப்பாக இருவரும் இருந்தாலும்கூட என் அன்னையின் பாதுகாப்பை நான் எப்போது இழந்தேனோ, அப்போதே பாதுகாப்பு என்கிற பெரிய வேலி இருந்த இடத்தில் அபவாதம், நிந்தை, வசை, படாப்பழி முதலியவைகள் வேலிபோல் சூழ்ந்துவிட்டன.

வெளியார் ஒருவருக்கும் நமது இதயத்தில் பிரகாசிக்கும் தூய்மையும், வைராக்யமும் தெரியாது. குதிரைப்பந்தயம், சூது,

கள்ளுக்கடை, வேசிவீடு முதலிய இடங்களுக்கு வேடிக்கை பார்க்கும் நோக்கத்துடன் ஒருவன்போனால்கூட அவனைப் பார்ப்பவர்கள் அந்தந்த இடத்திற்குச் சம்மந்தப்பட்டுச் சென்றதாகவே நினைப்பார்கள். இது உள்ளங்கை நெல்லிக்கனிபோன்றதாகும். அதை அறிந்து நாம் வீண் சனியனை விலைகொடுத்து வாங்கி அபவாத மூட்டையைச் சுமக்கும் சுமைதாங்கிபோலாவதை நான் விரும்பவில்லை.

படைத்த பரமன் நடுத்தெருவில் விட்டானானால் அதுவும் அவன் செயல். என் பாபம், அவ்வளவுதான். விதியை மாற்ற யாராலும் முடியாது. என் அன்னையின் அன்பு அணைக்கட்டுக்குள் நான் என் துன்ப வெள்ளத்தை அடக்கித் தேக்கி அபாயச் சுழல்காற்றிற்குத் தப்பி வாழ்ந்துவந்தேன். என் துரதிருஷ்டம் அன்பு அணைக்கட்டை அரைக்கணத்தில் உடைத்தெறிந்துவிட்டது. இனி எனக்குத் தாங்கும் துணை மனித சகாயத்தில் இல்லை. தெய்வ சகாயத்தில் அந்த ஆதிமூர்த்தி யாரை நியமிப்பானோ தெரியாது. அவன் பாதத்தை நம்பிப் போகிறேன். அண்ணா! எத்தகைய குற்றங்குறைகள் என்னிடம் இருப்பினும் மன்னித்துவிடுங்கள். அதோ ரயில் வந்துவிட்டது. நான் போய்வருகிறேன்''.

என்று கூறியவாறு எழுந்து குழந்தைகளைப் பிடித்துக்கொண்டு ரயில் வரும் பாதை யருகில்போய் நின்றாள். ரயிலும் வந்தது. இமை கொட்டும் நேரத்தில் கமலா குழந்தைகளுடன் வண்டியில் ஏறினாள். அடுத்த வினாடியே ரயில் தனது இன்னிசையுடன் கிளம்பியது. குருசாமியின் மனத் துடிப்புக்கு எல்லை வகுக்கமுடியுமா! எல்லாம் சொப்பனம்போல் தோன்றியது. ரயில் தன் ஞானகுருவை இழுத்துக்கொண்டு பயங்கரமாக ஓடுவதுபோல் ஒரு தோற்றம், உணர்ச்சி உண்டாகியது. கண்ணீர் முத்துக்கள் உருண்டு ஓடி டப்பென்று உடைந்து சிதறின. மண்ணோடு மண்ணாக மறைந்தது. மனிதவாழ்க்கையும் மண்ணோடுமண்ணாய் மறையும் மாய வாழ்வுதான் என்ற தத்துவத்தை உபதேசிப்பதுபோல் அக் காக்ஷி குருசாமிக்குத் தோன்றியது.

35

விதியின் நாடகம் - விலையிலா அன்பு

நல்ல அழகுள்ளவர்களுக்குக்கூட மனத்தில் சந்துஷ்டி போய் விட்டதென்றால் விகார களையும் சோபைக் குறைவும் உண்டாவது சகஜம். அதிலும் கமலா தன்னைத்தானே வெகு விகாரம்செய்து கொண்டுவிட்டதால் அவளைக்கண்ட யாருக்கும் எளிதில் இன்னார் என்று கண்டுகொள்ள முடியாத நிலைமை உண்டாகியது. அதோடு ரயிலில் உட்கார்ந்திருப்பவர்கள் இவளைப் பார்த்து ஏளனம் செய்யவும், பரிகஸிக்கவும், வெறுத்துப் பேசவும் தொடங்கினார்கள்.

இந்த சின்ன வார்த்தைகளும் சிரிப்புப் பேச்சுக்களும் கமலாவின் காதில் விழாமலில்லை. அதைக் கேட்கும்போது அவள் உள்ளம் பரம திருப்தியையும் சந்தோஷத்தையும் அடைந்தது. "நான் இந்த விகார ஸ்வரூபத்துடன் இல்லையெனில் எத்தனைக் கண்கள் விகார பார்வையுடன் நம்மீது வட்டமிடும்? அந்த சங்கடம் இல்லாது இத்தகைய கோரஸ்வரூபமே எனக்கு ஆனந்தமான சாந்தியை அளித்துக் காக்கட்டும், என் பர்த்தாவின் சுந்தரசோபையே குன்றியபிறகு என்னழகு மாண்டால்தான் என்ன! ஒன்றுமில்லை" என்று தனக்குத்தானே எண்ணித் தேறினாள்.

சொல்லத்திறமற்ற மனக் கவலையுடன் வண்டி ஏறிய கமலாவுக்குத் தன்னை ஜனங்கள் தெரிந்துகொள்ளாதிருப்பதும் வெறுப்பதுமே ஆனந்தமாகத் தோன்றியது. ரயில் போகும் வேகத்தில் வெளியிலுள்ள செடி கொடி, புல் பூண்டு, மரம் மட்டை முதலிய யாவும் கிருகிரென்று ஓடுவதைக் காணும்போது 'மனித வாழ்க்கையின் சக்கரங்கூட இப்படித்தானே சுற்றிக்கொண்டு ஓடுகிறது!' என்று எண்ணிப் பெருமூச்சுவிட்டாள்.

பெரிய ஜங்ஷனில் வண்டி சுமார் அரைமணி நேரம் நிற்பது வழக்கம்போல் நின்றது. அச்சமயம் பகல் பதினொருமணி; நல்ல படபடக்கும் வெய்யில் கொளுத்துகிறது. ரயில்வே ஸ்டேஷனிலேயே பெரிய போஜனசாலை இருப்பதால் சகலரும் அந்த அரைமணிக்குள் அந்த ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வரப்புறப்பட்டார்கள்.

'லக்ஷ்மீ கல்யாணம் வைபோகம்' என்று கூறும் ஒரு மங்களவார்த்தை கமலாவின் காதில் பட்டதும் தன்னை மறந்த சந்தோஷத்துடன் திரும்பிப்பார்த்தாள். அதே வண்டியில் அப்போதுதான் கல்யாணமாகிய இளந்தம்பதிகளைச் சிலர் குதூகலத்துடனும் ஆனந்தத்துடனும் ஏறச் செய்து ஆசனத்தில் சேர்த்தாப்போல் உட்காரச் செய்து மீண்டும், 'ஜெயமங்களா! நித்ய சுபமங்களா!' என்று பாடியவாறு கலகலவென்று சிறுமிகள் நகைத்தார்கள். தம்பதிகளின் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது. 'லக்ஷ்மீ கல்யாணம் வைபோகம்...சத்தே கிட்ட ஒக்காரடியம்மா...லக்ஷ்மீ கல்யாணம் வைபோகம், சத்தே சிரிடியம்மா!' என்று ஒரு பெரிய சுமங்கலிப் பாட்டி கல்யாணப் பெண்ணைப் பரிகஸித்தாள். இதைக்கேட்டுக் கல்யாணப்பிள்ளை உள்பட கலகலவென்று நகைத்தார்கள். ஒரே சந்தோஷமும் கும்மாளமுமாகவிருந்தது.

ஆனந்தக் காக்ஷியையாவது கண்ணால் பார்க்கலாம். இதுவாவது நமக்குக் கிடைத்ததே என்று சந்தோஷத்துடன் கமலா அந்த புதிய தம்பதிகளின் முகத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

அச்சமயம் ரயில் கதவுக்கு வெளியில் அகஸ்மாத்தாக அவள் பார்வை சென்றது. உடனே தீயை மிதித்தவள்போல் துள்ளியவாறு, "ஆ....அவர்தான்! அவர்தான்! சந்தேகமில்லாது அவர்தான்"

என்று தனக்குள் கூறியபடியே வண்டியைவிட்டு, குழந்தைகளைக் கூட மறந்து, இறங்கி ஓடினாள்.

அவள் மனத்தில் கொந்தளிக்கும் அன்பு அலையின் வேகத்தை வேடிக்கை பார்க்கும் பொதுஜனங்கள் அணுவளவாவது உணர முடியுமா! 'பயித்தியக்காரிபோல் ஓடுகிறாளே!' என்று சிலர் வாய் விட்டே கூறினார்கள். ரயில்வே—கேட்டுக்குச் சமீபத்தில் ஓடினாள். அங்கு யாரோ ஒரு பெண்மணி, தான் சாப்பிட்டு மிஞ்சிய சாப்பாட்டைப் போடுவதை சோமு பசியின் கொடுமையால் பறக்கப் பறக்கத் தின்றுகொண்டிருந்தான்.

இவனுடைய பரிதாபத்தைக் கண்டு அந்தம்மாள் மனது கரைந்து பச்சாத்தாபத்துடன் "உம்....விதி! விதி...ஐயோ பாவம்! படித்தவன்போல் தோன்றுகிறது. ஆங்கிலமும் அழகாய்ப் பேசுகிறான். வித்தைகள் இருந்தென்ன! விநோதங்கள் தெரிந்தென்ன! விதியின் தாண்டவத்திற்கு முன்பு எதுதான் நிலைக்கும்" என்று சற்று உரக்கவே கூறினாள்.

இதைக்கேட்டுக்கொண்டு சென்ற கமலா அருகில் வந்து அந்தம்மாளைப் பார்த்ததும் தூக்கிவாரிப்போட்டது. "ஐயோ! டாக்டர் ரமாதேவியா! அவர்கள் எதிரிலா நான் வந்து நிற்கிறேன்...என்னையும் அவரையும் ஒரு காலத்தில் உன்னத தம்பதிகளாய் அன்புமயமான ப்ரக்ருதிகளாய்ப் பார்த்த இவர் முன்பா நாங்கள் இத்தகைய அலங்கோலத்தில் காக்ஷி கொடுப்பது?" என்று ஒரு ஸெகண்டு தோன்றி தயங்கினாள். இதயம் முன்னுக்கிழுக்க கால்கள் பின்னுக்கு இழுக்கத் தடமாடுகிறாள்.

கமலா இறங்கி வந்தவுடனே குழந்தைகளும் பின்னாலேயே 'அம்மா! அம்மா!' என்று கூவியவாறு ஓடிவந்தார்கள். சாப்பிடும் வேகத்தில் முதலில் சோமு பார்க்கவில்லை. குழந்தைகள் கூவிக்கொண்டு வந்தபோது அகஸ்மாத்தாகத் திரும்பிப் பார்த்தான். கையிலிருந்த சாதம் அப்படியே நின்றுவிட்டது. வாயிலிருந்த சாதம் தொண்டைக்குள் போகாமல் திக்கி நின்றது. கண்கள் விரைக்க விழித்த பார்வையும் அப்படியே நின்றது...'ஜெயா!...கண்ணா! ராஜு!'...என்று மனத்திற்குள் கூவிக்கொண்டான்.

கை சாதமும் தவறிக் கீழே விழுந்தது. ஆசையின் வேகம் இதயத்திலிருந்து பீறிக்கொண்டு வந்து வாயிலுள்ள சாதத்தை வெளியில் தள்ளியது. எச்சில் என்கிற விவஸ்தையும் புத்திரவாத்ஸல்யத்தின் திரையில் மறைந்துவிட்டது. குழந்தைகள் அம்மாவென்று அழைத்த பிறகு கமலாவை ஏற இறங்கப் பார்த்தான்.

முகமெல்லாம் சுட்டு வெந்து புண்ணாகி விகாரத் தழும்புகளுடன் கறேலென்று கோர ஸ்வரூபமாயிருப்பதைக் கண்டு நடுநடுங்கிய சோமு "யாரு!....கமலாவா! என் கமலாவா! நிஜமாகவா இல்லை...இல்லை...இது யாரோ...ஜெயா!"...என்று தன்னை யறியாது வாய்விட்டுக் கூறிவிட்டான்.

கமலாவுக்கும் தர்மசங்கடமாகத் தோன்றியது. ரமாவுக்குப் பெருத்த சந்தேகமும் கலவரமும் உண்டாகியதால் கமலாவை விரைக்க விரைக்கப் பார்த்தாள். இனி தான் தப்பி ஓடவும் முடியாது. அப்படிப் போகவும் மனமில்லை. ஆதலால் எது எப்படியாகிலும் சரி என்று ஒரு நொடிப் பொழுதில் மனத்தில் ஒரு வைராக்யமும் உறுதியும் செய்துகொண்டு ஸ்ரீமதி ரமாதேவியின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி அவளே ப்ரமிக்கும்படி எழுந்து நின்றாள். ஆனால் வாய்திறந்து பேசமுடியாது துக்கம் பீறிக்கொண்டு வந்ததால் தேம்பித்தேம்பி அழுதுவிட்டாள். ரமாதேவிக்கு ஒன்றுமே புரியாது தவித்தாள். "அம்மா...நீ யாரம்மா!...எனக்குத் தெரியவில்லையே!" என்றாள்.

இதற்குள் சோமுவுக்கு ரமாதேவியைத் தெரிந்துவிட்டதால் ஓடவாரம்பித்தான். கமலாவுக்கு அவனை விட்டுவிட மனம் வரவில்லையாதலால் அவன் பின்னாலேயே ஓட்டமாக ஓடியவாறு 'போகவேண்டாம்...ஸ்வாமீ! நில்லுங்கள். நில்லுங்கள். இனி நான் உங்களை ஐந்து நிமிடம் பிரிந்திருந்தாலும் உயிர் தரிக்கமுடியாது. நான் உங்கள் ப்ரமாணத்திற்குக் கட்டுப்பட்டு இந்த உயிரைச் சுமந்துவருகிறேன். என்னைச் சோதனைக்குள்ளாக்கவேண்டாம்" என்று தன் மனத்தை விட்டுக் கதறிவிட்டாள்.

சோமுவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. திரும்பிப் பார்க்கவும் மனம் வரவில்லை. ஓடவும் கால் எழும்பவில்லை. தியங்கியபடியே "கமலா!...என்னை என்னவோ சித்திரவதை செய்கிறது. உன் கண்ணீரைக் கண்டு என்னால் சகிக்கமுடியவில்லை என்னை விட்டுவிடு" என்று கதறினான்.

இந்த பரிதாபகரமான காக்ஷியைக் கண்ட ரமாதேவிக்கு ஒன்றுமே புரியவில்லை. கமலாவின் குரலையும் சோமுவின் குரலையும் எங்கோ கேட்டதுபோல் ஒரு உணர்ச்சி தோன்றியது. வருஷங்கள் பலவாகிவிட்டதாலும் தினேதினே ஆயிரக்கணக்கான மனிதர்களைப் பார்த்துக்கொண்டேயிருப்பதாலும் அடையாளங்கண்டுகொள்வது முடியாத காரியமல்லவா!

எனினும் தான் இதை அறியவேண்டுமென்கிற ஆவல் உண்டாகியதால் சற்றும் கர்வமோ பெருமையோ இல்லாது தானும் பின்னால்போய் "அப்பா! இதோ பாரு! ஓடாதே. நில்லு. நீ யாரோ! அவள் யாரோ! எனக்குப் புரியவில்லை. ஏன் ஓடவேண்டும்?" என்று கேட்டாள். இதற்குள் கமலா ஓட்டமாக முன்சென்று சோமுவின் கைகளைச் சடக்கென்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

சோமுவின் இதயம் துடிக்கும் துடிப்பில் அப்படியே நின்றுவிடுமோ என்கிற சந்தேகங்கூட உண்டாகிவிட்டது. "கமலா! என்னை ஏன் தடுக்கிறாய்? நான் ஏன் உன் கண்ணில் பட்டேன். கமலா! உன் முகமேன் இத்தனை விகாரமாகிவிட்டது?...எனக்குப் பேசவே தெரியவில்லையே! உன்னைப் பார்ப்பதற்குமுன்பு உன்னை

எப்போது பார்ப்பேன் என்று உள்ளம் ஏங்கித் துடித்தது. முக்ய மான விஷயத்தை உன்னிடம் சொல்வதற்குத்தவித்துத்தேடினேன். ஆனால் உன்னைப் பார்த்தபிறகு சகிக்க முடியாத சங்கடம் செய் கிறது. ஏன் பார்த்தேன் என்றிருக்கிறது. போதாக் குறைக்கு டாக்டரம்மா வேறு...ஐயோ! அதோ வருகிறார்கள். கமலா!... என்னை விட்டுவிடேன்" என்று கத்தினான்.

இதற்குள் டாக்டர் ரமாதேவி அவனருகில் வந்து "அம்மா! இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. இவர் முன்பு ரயில் விபத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்த சமயம் நீ என் ஆஸ்பத்திரியில் ப்ரஸவத்திற்கு வந்திருந்தாயல்லவா...இத்தனைநேரம் புரியவில்லை. இவர் மிஸ்டர் சோமநாதனா? இவருக்கு இத்தகைய துர்வ்யாதி எங் கிருந்து வந்தது! உன் முகத்தில் இத்தகைய விகாரம் எப்படி உண் டாயிது! இன்னும் 10 நிமிஷந்தான் இருக்கிறது; ரயில் புறப்பட்டு விடும். கமலா! மிஸ்டர் சோமநாத்! இப்படி வாருங்கள். அந்த மரத்தடியில் நின்று பேசலாம்" என்றாள்.

கமலா விடாப்பிடியாய் அழைத்துக்கொண்டுவந்து மனித சஞ் சாரமில்லாத இடத்தில் நிறுத்தி, தானாகவே ஆதிமுதல் சகல விஷ யங்களையும் கூறினாள். ஆனால் தன் மைத்துனர் விஷயத்தை அடி யோடு மறைத்துவிட்டுத் தன்னுடைய அழகே தனக்குச் சத்ருவாய் இருப்பதாயும் பலருடைய துஷ்டக் கண்கள் தன்மீதுபட்டு அவர் களைக் கலக்கி துராக்ருதத்தில் பிரவேசிக்கச் செய்ததாயும், அதனால் தன்னைப் பிறர் கண்டு வெறுக்கும்படி உரு மாறிவிட்டால் ஆபத்தோ, பயமோ இருக்காதென்றதால் தானே இம்மாதிரி செய்துகொண்ட தாகப் பொருத்தமாகக் கூறினாள்.

இதைக்கேட்ட ரமாவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அவ ளுடைய கண்களுக்கு கமலா வைராக்ய பிம்பமாயும், பரிசுத்தப் பதுமையாயும் காணப்பட்டாள். "கமலா! உன்னுடைய அபாரமான துணிச்சலைக் கேட்க எனக்கு மயிர்க்கூச்செரிகிறது. என்ன பரி பக்குவம்! எத்தனை விரக்தி, உன் இதயம் மனிதருக்குள்ள பாச பந்தங்கள் நிறைந்த இதயமில்லை. ஞான பக்தி வைராக்யத்தால் நிரம்பிய ஞானதீபம்போலவே பிரகாசிக்கின்றது. அழகற்றவர்கள் கூட தங்கள் குரூபித்தனம் தெரியாமல் தற்கால நாகரீகத்தில் தாண்டவமாடும் சோப்புக்களைத் தேய்த்தும், ஸ்னோ பவுடர்களைப் பூசியும்,கிழவிகளெல்லாங்கூட சிறிய பெண்களைப்போல் அலங்காரம் செய்துகொண்டும் மினுக்கும் காலத்தில் உன்னைப்போன்ற ஓர் உத்தம பிரக்ருதிகளைக் காண்பது எப்படியிருக்கிறது தெரியுமா! பகல் வேளையில் நக்ஷத்திரங்களைக் காண்பதுபோலும், இராக்காலத் தில் சூரியனைப் பார்ப்பதுபோலும் இருக்கிறது.

கமலா! என்னுடைய சரித்திரத்தை நீ கேட்டால்கூட வியப் பாய். இருப்பினும் நான் அனுபவித்தகாலத்தில் இம்மாதிரி துன்பம் உலகத்தில் யாருமே அனுபவித்திருக்கமாட்டார்கள் என்றே எண்ணி

னேன். இருப்பினும் உன்னைப்போல் அத்தனை பரிபக்குவமும், தீர வைராக்யமும் எனக்கு ஏற்படவில்லை. அதிகமான அழகு செய்து கொள்ளவில்லையேயன்றி அழகைக் குலைத்துக்கொள்ளும் உறுதியும் உணர்ச்சியும் உண்டாகவில்லை.

கமலா!...பேசிக்கொண்டேபோனால் ரயில் தவறிவிடும். நீ இப்போது எங்கு போகக் கிளம்பினாய்? உன்னைப் பாதுகாக்க யாரேனும் இருக்கிறார்களா!" என்றாள்.

கமலாவினால் துக்கம் சகிக்கமுடியவில்லை. "அம்மணீ! எனக்குள்ள திக்குதான் நீங்களறிந்ததாகும். முன்பு குடியிருந்த வீட்டுக்குப்போய் அந்தம்மாளின் தயவில் ஒட்டிக்கொண்டு இவரைத் தேடிப்பிடித்து இவரோடு இருந்துவிடலாம் என்றுதான் கடவுளை நம்பிக் கிளம்பினேன். அவர் என்னை எந்த கதிக்குள்ளாக்கப் போகிறாரோ...

என்று முடிப்பதற்குள் ரமா பெருமூச்சுவிட்டபடியே...'உம்.... பாவம். உனக்கு விஷயமே தெரியாது. அந்தம்மாள் சென்ற வருஷம் கடுமையான சிக்கினால் படுத்திருந்தார்கள்; நான்தான் வைத்தியம் செய்தேன். அவர்கள் இறந்து ஒரு வருஷமாகிவிட்டது. அவர்கள் வீட்டில் யாருமே இல்லை. கிழவரும் மற்ற குழந்தைகளும் சந்துருவிடம் பூனாவுக்கே போய் சேர்ந்துவிட்டார்களாம்.

இதைக்கேட்ட கமலா தீயை மிதித்தவள்போல் துள்ளி... 'ஐயையோ! அந்தம்மாளுமா இறந்துவிட்டார்கள்! என்னுடைய துரதிருஷ்டந்தான் இம்மாதிரி ஆகியதே...ஸ்வாமீ! இரு கையும் விட்டேனே த்ரௌபதியைப்போலே என்று என் கதியாகிவிட்டது. உங்களுக்கு வியாதியானால் பாதகமில்லை. இனி நான் விடவேமாட்டேன். என்னால் ஐந்து நிமிஷமும் தனித்திருக்கமுடியாது. நீங்கள் என்னை விட்டுப் போகவேகூடாது' என்று சோமுவைப் பார்த்துக்கதறினாள்.

இதைக்கேட்ட ரமா, "கமலா! அவர் சொல்வதை நான் மிகவும் போற்றுகிறேன். என்னவிருப்பினும் அவர் தீர்க்கமாய் யோசித்துத்தான் செய்கிறார். நீ அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது. இன்று நீ தனிமையாயிருப்பதற்குப் பார்த்தால் நாளை உன் குழந்தைகளின் வாழ்க்கையை நீயே குலைத்ததுபோலாகும்; ஆதலால் வீண் தொந்திரவு செய்யாதே. நீயும் நானும் முன்பின்னறியாதவர்களாயிருப்பினும் முன்பு உன்னிடம் உண்டாகிய ஓர் பிரீதி என்னிதயத்தில் பதிந்தே இருக்கிறது. அதற்குக் காரணம் உனது பதிபக்திதான். நீ பயப்படாதே. என்னுடைய ஆஸ்பத்திரியில் நீ உன் குழந்தைகளுடன் வந்து இரு. ஏதாவதொரு வேலை கொடுக்கிறேன். செய்து கொண்டுவா! நான் ஓர் ஆங்கில டாக்டராகவிருப்பினும், எனக்கு நாட்டு வைத்தியமுறைகளில் சிலது மிகவும் பிடிக்கும். மூலிகைகள், பச்சிலைகள், முதலியவற்றில் எனக்கு அபாரமான நம்பிக்கை உண்டு. இவ்வூருக்கு 60 மைலுக்கப்பால் ஔஷதமலை என்றொரு மலை இருக்கிறது. அதில் ஒரு சன்யாசி மகா உத்தமர், மகா ஞானி, வெகு

காருண்யமுடையவர். அவர் தன்னிடம் நம்பிக்கையுடன் அண்டி வருபவர்களுக்கு மூலிகைகளாலும் பச்சிலைகளாலும் சிகித்ஸை செய்கிறாராம். இம்மாதிரியான துர்வியாதிகள் குணமடைவதாகவும், அப்படி குணமாகியவர்கள் ஸ்வாமிகளை ஊருக்குள்வரும்படி அழைத்தும் வரமுடியாதென்று மறுத்துவிட்டதாயும் சொல்லக் கேட்டிருக்கிறேன்...'மிஸ்டர் சோமூ! தாங்கள் தயவுசெய்து அங்கு போய் விடுங்கள். உங்கள் பிரதிக்ஞைப்படி ஒருவருக்கும் உங்கள் மர்மம் தெரியவேண்டாம். குணமாவதும் ஆகாததும் அவரவர் விதி விட்ட வழியாகிறது. கடவுளை நம்பிச் செல்லுங்கள். நான் கமலாவை என்னிடம் அழைத்துப்போகிறேன்....அதோ மணியடித்துவிட்டதே... வா கமலா!'...என்று கூறியபடியே கிளம்பினாள்.

சோமுவுக்குத் தன் மனைவிமக்களை ஆதரிக்கும்பொருட்டு சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மியே இந்த உருவத்தில் வந்திருப்பதாகத் தோன்றியது. அவள் காலில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப் பேசமாட்டாது திக்கித்திக்கி அழுதான். "கமலா! இந்தம்மாள்தான் உனக்கு சாக்ஷாத் பேசுந் தெய்வம்...இவர்தான் உனக்குக் கதி... இச் சமயத்தில் உனக்கு இன்னொரு விஷயத்தைச் சொல்லவேண்டாம் என்று எண்ணினேன்; இருப்பினும் அதுவும் பரிதாபகரமான விஷயமாயிருப்பதால் மனது கேட்கவில்லை. காமுவும் அவள் கணவனும் அந்தச் சாமியாரைக் கொலை செய்துவிட்டார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கைதிகளாகக் கொண்டுபோகும்போது ரயில்வே ஸ்டேஷனில் கண்டு மனந்துடித்தேன்...காமு தான் கொலை செய்ததாக ஒப்புக்கொள்கிறாள். நான் இன்னாரென்று தெரியாமலேயே அவளிடம் பேசினேன்.

கமலா!...திருவொத்தியூரிலுள்ள ப்ரபல துப்பறியும்நிபுணராகிய ராஜாராம் நாயுடுகாரு என்றொருவர் இருக்கிறாராம். அவரிடம் விஷயத்தைத் தெரிவித்தால் ஏழைகளுக்கு தர்மத்திற்குக்கூட செய்கிறார் என்று கேள்விப்பட்டேன். அந்த காரியத்தை உன்னால் முடிந்தால் செய்துபாரு...பரதேசிப்பெண் தூக்கிலகப்படாமலாவது தப்பிப் பிழைக்கட்டும்" என்று பரிதாபமாகக் கூறினான்.

எல்லாச் சங்கடத்திற்கும்மேல் பெரிய சங்கடமான இவ்விஷயத்தைக் கேட்டதும் கமலா அப்படியே துடித்தாள். "என்ன! காமுவா கொலை செய்தாள்!...காமுவா!...இருக்காது...ஒருநாளும் இருக்காது...அவள் தன் கையால் ஒரு சிறிய எறும்பைக்கூட கொல்லமாட்டாள். அவள் மனத்தின் பச்சாத்தாபத்தையும் கருணையையும் நானறிவேன்...டாக்டரம்மா!...இடிமேலிடி,பேரிடிபோன்ற அதிர்ச்சிகளை என்னால் தாங்கவே முடியவில்லையே....என்ன செய்வேன்" என்று கதறுவதற்குள் ரயில் கிளம்பும் மற்றொரு மணியும் அடித்தாகிவிட்டது.

ரமா கமலாவைப் பிடித்திழுத்தாள். சற்று தூரத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தவர்களையும் அழைத்துக்கொண்டு

வந்து அவர்களை மூன்றாவது வகுப்பில் ஏற்றிவிட்டுத்தான் முதல் வகுப்பில் ஏறினாள். அடுத்த நிமிஷமே வண்டி கிளம்பிவிட்டது.

சோமு தூரத்திலிருந்து இவர்களையே பார்ப்பதைக் கமலா கண்டு இன்பமும் துன்பமும் அடைந்து உருகினாள். பின்னும் சில வினாடிக்குள் ரயில் பறக்கும் வேகத்தில் அந்த உருவமும் மறைந்தது; கமலாவின் இதயத்தில் துக்க இருளும் சூழ்ந்தது.

36

புலியே வியக்கும் புனிதவதி

"யார் வந்திருப்பது, லேடீ டாக்டரா! உள்ளே வரச்சொல்லு" என்று ராஜாராம் நாயுடு கம்பீரமான த்வனியில் கூறினார். உடனே ஸ்ரீமதி ரமாதேவியும், கமலாவும் உள்ளே வந்தார்கள். நாயுடுவுக்குக் கமலாவைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. மெல்ல அடக்கிக்கொண்டதை அறிந்த ரமா "நாயுடுகாரு! வெளி அழகு இல்லையே என்று நகைக்கின்றீர்களா! அந்த அநித்யமான வெளி அழகை துச்சமாக எண்ணி விலக்கித் தள்ளிய வீரமணி என்றால் இவளுக்கே தகும். (கமலாவின் சரிதையைக் கூறி) இத்தகைய தைரியமும் விரக்தியும் வேறு யாருக்கேனும் வருமா! எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. மடியில் கனமில்லாவிடில் வெளியில் பயமில்லை என்கிறபடி தன்னிடம் அபாயத்திற்கு ஏதுவான அழகு குலைந்துவிட்டபிறகே அவள் நிம்மதியாக வாழ்கிறாள் பாவம். கடவுள் அவள் பரிசுத்தத்திற்கும், உத்தம குணத்திற்கும், சிறந்த ஒழுக்கத்திற்கும், பரிசுத்தமான பதிபக்திக்கும் இரங்கி அவள் கணவனின் வியாதியைப் போக்கவேண்டும்.

இன்னொரு முக்ய காரியமாய்த் தங்களிடம் வந்தோம். இவளுடைய நாத்தனாரின் சரிதையொரு தனிக் கதை (அதைக் கூறி) தற்சமயம் அந்த பேதைப் பெண் கொலையாளி என்கிற பட்டத்திலிருக்கிறாள். அவள் என்னவோ தான் கொலைசெய்ததாயும், தன் குற்றத்தை தானே ஒப்புக்கொள்வதாயும் கூறுகிறாள். ஆனால் அவளுடன் கூடப்பழகிய இவளும் இவளுடைய கணவனும் அவள் ஒருபோதும் செய்திருக்கவேமாட்டாள்' என்று முழு மனத்துடன் நம்புகிறார்கள். நம்பிக்கையும், அவர்கள் விடுதலையாகவேண்டுமே என்கிற ஆசையும் பரிபூர்ணமாகவிருக்கிறதேயன்றி உங்களுக்கு வேண்டிய உதவி செய்து சன்மானிப்பதற்குக் கையில் வரட்சிதான் நிரம்பி இருக்கிறது. அதனால் தங்களிடம் வருவதற்கே பயந்தாள். இருப்பினும் 'ஆசை வெட்கமறியாது' என்பதுபோல் வந்திருக்கிறாள் பாவம்.

தாங்கள் ஏழைகளிடம் ப்ரத்யேகமான அன்பு காட்டுபவர் என்பது எங்களுக்குத் தெரியும். அதனுல்தான் வந்தோம். கொஞ்சம் கிருபை செய்யவேண்டும்'' என்று மூச்சுவிடாமல் கூறிஞள்.

கமலாவின் சிறந்த தியாகத்தின் மகிமை அவர் இதயத்தைப் போய் துளாவியது. என்ன ஆச்சரியம்! தன்னழகைத் தானே குலேத்துக்கொண்டாளா!...எத்தகைய மனே வலிமையும், வைராக்கியமும் இருந்தால் இக் காரியம் நடக்கும்? இது சாமானியமானச் செய்கையா! வியப்பின்மேல் வியப்பாகவன்றே இருக்கிறது! இத்தகைய வனிதாமணியை நம்முடைய அம்புஜத்துடன் பழக்கினல் எத்தனை அருமையாக வேலே செய்வாள்'' என்றுகூடத்தோன்றியது.

கமலாவை நோக்கி, ''அம்மணீ! தன்னுடைய கற்பைக் காக்கும் பொருட்டு உயிரை இழந்ததாகவும், எதிரியை வீரத்துடன் வெட்டி வீழ்த்தியதாகவும் பழங்கால சரித்திரங்களில் படித்திருக்கிறேனே யன்றி நான் நேரில் இக்கலிகாலத்தில் கேட்டதுமில்லே; கண்டதுமில்லே. கணவனே இழந்த கைம்பெண்களும், கணவனுல் விலக்கப் பட்ட வாழாத பெண்களும், பிறவியிலேயே பரம விகார ஸ்வரூபத்தையுடைய பெண்கள்கூட தம்மை அழகு செய்துகொள்வதில் பின்னடைவதில்லே. தனது அழகின் திமிரால் சிலர் அழகுக்கும் அழகு செய்துகொண்டு ஆடவர்களின் முன்பு வேண்டுமென்றே தோன்றி அவர்களுடைய மனத்தைச் சிதறவடிக்கும் பாவிப் பெண்களும் உலகில் இல்லாமலில்லே. இம்மாதிரி ஆச்சரியத்தைக் காண என் மனதே வியப்புக்கடலாடுகிறது. உன் தியாகத்தை நான் மெச்சுகிறேன். எந்த பெண்களும் தன் கணவனுக்காக அலங்காரவதிகளாக பிரகாசிக்கவேண்டுமேயன்றி தனக்காகவல்ல'' என்கிற தத்துவத்தை அசோக வனத்தில் சிறை இருந்த லோகமாதாவாகிய சீதாபிராட்டி நிரூபித்துக் காட்டியிருக்கிருள்.

அந்த ஒரு அற்புதமானதும் ஆச்சரியமானதுமான தத்துவத்தை நடைமுறையில் பழக்கிக்கொள்வதுதான் சிரம சாத்யமானதாகும். நீ மகா உத்தமி, குணவதி, உன்னுடைய செய்கையை உலகமே கொண்டாடும்; நானே பிரமிக்கிறேன். இந்த வழக்கில் நான் வந்து செய்வதற்கு வேலே ஒன்றுமே இல்லேயேம்மா! கொலே நடந்து எத்தனேயோ காலமாகிவிட்டது. அதோடு குற்றவாளிகள் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கும்போது அதற்கு வேறு யார் என்ன செய்ய முடியும் என்றுதான் தோன்றுகிறது'' என்ருர்.

இதுவரையில் மௌனமாகவே நின்றிருந்த கமலா நாயுடுவை நோக்கி, ''அப்படிச் சொல்லிவிடக்கூடாது. என்னுடன் காமு பழகியவரையில் அவள் மனத்திஞல்கூட பிறருக்குத் தீங்கு நினேத்தவளல்ல. அவள் கையினுல் கொலே செய்தே இருக்கமாட்டாள் என்று என் மனம் நம்புகிறது. நாங்கள் பரம ஏழைகள், தங்களுடைய சேவைக்குத் தகுந்த மரியாதை செய்யக் கையாலாகாதவளாயிருக்கிறேன். தாங்கள் ஏழைகளுக்கு இரங்கி உதவவேண்டும்.

காமுவின் குழந்தைகள் எங்கோ அனாதை நிலயத்திலிருக்கின்றன வாம். அவர்களையும் தயவுசெய்து என்னிடமே கொண்டு சேர்த்து விடக் கோருகிறேன். என் குழந்தைகளுடன் அவர்களையும் நான் வளர்த்துவருவேன். இந்த உதவிகளைத் தாங்களன்றி வேறு யாரும் செய்யமுடியாது" என்று வெகு வணக்கத்துடன் கூறினாள்.

நாயு:—அம்மணீ! உன் குழந்தைகளை வைத்துக்கொண்டே நீ காப்பாற்றுவது கஷ்டமான நிலைமையிலிருக்கையில் அந்த குழந்தை களையும் வைத்துக்கொண்டு நீ என்ன செய்வாயம்மா! இக்காலத்தின் போக்கில் எங்கோ அனாதை நிலயத்தில் நிம்மதியாக இருப்பவர்களை நீ வைத்துக்கொண்டு ஏன் சிரமப்படவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் உன் தாராள மனத்திற்கும் சற்று தடை உத்திரவைப் பிறப்பித்துக்கொள்ளு நீ இவ்வளவு சொல்வதால் நான் ஏதோ முயற்சித்துப் பார்க்கிறேன். பலன் இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. தூக்குத் தண்டனை இல் லாது தீவாந்திர சிக்ஷை என்று விதிக்கும்படி வேண்டுமாயின் செய்ய லாம். அதற்குமேல் இதில் இடமிருப்பதாகத் தோன்றவில்லை. ஆண்டவன் செயல் எப்படியோ!...ரமா தேவி! இந்தம்மாளுக்குத் தக்க வேலை கொடுத்து ரக்ஷிப்பதோடு முகத்தின் வடுக்களையும் கருப்புகளையும் உங்கள் அவுடதத்தால் போக்கிவிடுங்கள். முன்பொரு தரம் ஒரு உயர்ந்த பச்சிலையை உங்களிடம் சொல்லியிருக்கிறேனே! ஞாபகமிருக்கிறதா! அதை அறைத்து முகத்தில் தடவுங்கள், இந்த விகாரம் மறைந்துவிடும்—என்றார்.

ரமா:—நாயுடுகாரு! தாங்கள் இன்னும் பத்துநாட்களுக்கு முன்பு பார்த்திருந்தால் என்ன சொல்வீர்களோ! எத்தனையோ மருந்துகளின் உபயோகத்தினால் இவ்வள்வாவது இருக்கிறது.... சரி....நாங்கள் வருகிறோம். தாங்கள் தயவுசெய்து முயற்சிக்க வேண்டும்.

நாயு:—டாக்டர்! நான்தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே! இந்த விஷயத்தில் அழுத்தமான ஆதாரம் எதும் இருப்பதாகவே தெரியவில்லை. ஏதோ பார்க்கிறேன். பாவம்! இந்த பெண்ணுக்கு ஆதரவை அளித்துக் காப்பாற்றுங்கள்—என்றார்.

பிறகு ரமா கமலாவுடன் தன்னிருப்பிடத்திற்கு வந்தாள். நாயுடுவின் வார்த்தைகள் உறுதியாக இல்லாமையால் கமலாவுக்குச் சற்று மனக்குறையாகவே இருந்தது. கடவுளை பிரார்த்திப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? இத்தனை தூரமாவது தனக்கு உதவி செய்யும் ரமாவைப் பின்னும் தான் உபத்திரவிக்கக்கூடா தென்று மௌனம் சாதித்தாள்.

கமலா சற்று படித்த பெண்ணாகையால் ஆஸ்பத்திரியில் நோயாளிகளின் சீட்டைப் பரிசீலனை செய்து பார்த்து, தேதி போட்டு உள்ளே டாக்டரிடம் அனுப்பும் வேலையை ரமாதேவி

கமலாவுக்குக் கொடுத்தாள். அந்த வேலையில் கமலாவுக்கு மிகவும் திருப்தி உண்டாகியது. நூற்றுக் கணக்கில் வரும் நோயாளிகளைக் காணவும் அவர்கள் பேசுவதைக் கேட்கவும், தேதி போட்டுக் கொடுக்கவும் அவளுக்கு மிகவும் பொழுதுபோக்காக இருந்தது.

ரமா தேவி தன் பங்களாவின் தோட்டத்திலுள்ள அவுட்டவுஸிலேயே கமலாவுக்கு வசிக்க இடங்கொடுத்திருந்ததால் கமலா நிர்ப்பயமாக தன் குழந்தைகளுடன் காலத்தைக் கடத்தத் தொடங்கினாள். மாதங்களும் சில ஆய்விட்டன. காமுவைப்பற்றிய விஷயமோ, தன் கணவனைப்பற்றிய விஷயமோ ஒன்றுமே தெரியாது திகைத்தாள். பெண் பேதை அதிலும் பணக்கட்டோ, மனிதக் கட்டோ அற்ற அனாதை. அவள் வேறு என்ன செய்யமுடியும்? மனது மட்டும் அலைந்து தவிக்கிறது.

37

ஆவியின் திருநடனம்

“டேடே! சாம்பசிவா!...சந்திரசேகரா! எல்லாரும் இங்கு வாருங்கள். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்...பரமாச்சார்யம், இந்த ஒட்டடையை வந்து பாருங்களேன்...விநோதத்திலும் விநோதம்'...என்று ஒருவன் தலைதெறிக்கக் கூவியழைத்தான். காமுவின் துரதிருஷ்டத்திற்கு ஏதுவாயிருந்த சாமியாரின் மடத்து சிஷ்யர்களில் சிலர் மட்டும் அச்சாமியாரை உள்ளது உள்ளபடி நம்பியிருந்தார்கள்.

அவர்கள் சாமியாரின் துர்மரணத்திற்குப் பிறகும் அந்த மடத்தை விடாமல் அதிலேயே இருந்துகொண்டு ஸ்வாமிகளின் படத்திற்கும், பகவானின் படத்திற்கும் பூஜை செய்வதும், ஸ்வாமிகளின் ஆத்மா சாந்தியடையும்பொருட்டு பிரார்த்தனை செய்வதும் தங்கம் எடுப்பதில் சாமியார் கையாண்ட முறையை அனுஷ்டிப்பதுமாக பரம சிரத்தையுடன் இருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவன் சாமியார் எப்போதும் உட்கார்ந்து ஜபம் செய்யும் இடத்தில் தற்செயலாக மேலே அண்ணாந்து பார்த்தான். மேலே கட்டியிருக்கும் ஒட்டடையில் விநோதமான எழுத்துக்கள் போல் நூலால் கட்டியிருந்ததைக்கண்டு அவன் பிரமிப்படைந்து மேலே விவரித்ததுபோல் எல்லோரையும் கூப்பிட்டான்.

மற்றவர்களும் ஓட்டமாக ஓடிப்போய் அந்த ஓட்டடைக் கூண்டை வெகு உன்னிப்பாகவும் ஆச்சரியத்துடனும் பார்த்தார்கள். "என்ன ஆச்சரியம்! இது கலிகாலத்து விநோதத்திலும் விநோதமாயிருக்கிறதே... எங்கே? இன்னும் நன்றாகப் பார்க்கலாம்... என்ன எழுதியிருக்கிறது?

"என் ப்ரிய சீடர்களே!

நான்... சாகவில்லை... நிஷ்டையிலிருந்த சமயம் நான் செத்துவிட்டதாக எண்ணி என்னுடைய சரீரத்தைப் புதைத்து விட்டீர்கள். நான் நிஷ்டையிலிருந்து கண்விழித்தபோது என் சரீரத்துடன் சமாதியிலிருந்தேன்... விஷயம் விளங்கிற்று. என்னுடைய சரீரம் இல்லாமையால், அங்கு வரமுடியாமல் திகைக்கிறேன். மாதங்கள் ஓடுகின்றன. நான் இருப்பதை எப்படியும் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அலைந்தேன். நான் ஆவியாக வந்தால் நீங்கள் பயப்படுவீர்களென்று தோன்றியதால் சிலந்திப் பூச்சியின் உடலில் நான் புகுந்துகொண்டு இதை எழுதுகிறேன். சரியான மனித சரீரம் காட்டில் கிடைத்தால் அதில் புகுந்துகொள்ளலாம் என்று உத்தேசம். சரீரம் கிடைத்ததும் தெரிவிப்பேன். பயப்படாதீர்கள். எனது காஷாயத்தைத் தயாராக எடுத்துச் சுருட்டி எரவானத்தில் வைக்கவும். நான் அதை எடுத்துக்கொள்வேன். இந்த ரகஸியத்தை வெளியிடவேண்டாம்."

என்று மெல்லிய நூலால் சிலந்திக் கூட்டின் பின்னலோடு சேர்ந்தாற்போல் எழுதியிருந்ததைப் படித்தால் யார்தான் வியப்படையாமல் இருப்பார்கள்? மாறிமாறிப் படிக்கிறார்கள். கன்னத்தில் போட்டுக்கொண்டு விழுந்துவிழுந்து சேவிக்கிறார்கள். "ஐயோ! குருநாதரின் சமாதியில் தெரியாமல், கொலைசெய்துக் கொன்றுவிட்டதாக எண்ணி அவரை உயிருடன் புதைத்துவிட்ட பாவம் நம்மை விடுமா! அனியாயமாகப் புதைத்துவிட்டோமே... முட்டாள்தனமாக பெரிய நிதியை இழந்துவிட்டோமே"... என்று தவிக்கிறார்கள். உண்மையில் கண்ணீர்விட்டுக் கதறுகிறார்கள். இதை வெளியிடவேண்டாம் என்று வேறு சொல்லி இருக்கிறாரே! என்ன செய்வது? குருஹத்தியும் கொலைப்பாதகமும் நம்மையல்லவா வந்து சூழ்ந்துவிட்டது? இத்தனைக்கும் காரணம் யாரென்று சொல்வது? பாதகத்திலும் பஞ்ச மகா பாதகம் குருவைக் கொலை செய்ததன்றோ!... என்று துடிக்கிறார்கள்.

பாதகம் தங்கள் எதிரில் பயங்கர உருவத்துடன் தோன்றி தாண்டவமாடி உறுமுகின்றதுபோல் ஒரு தோற்றம் உண்டாகி சரீரமே நடுக்கல் எடுத்துக்கொண்டது. சாமியாரின் காஷாயத்தை நன்றாகத் தோய்த்து காயவைத்து மடித்து எரவானத்தில் சொருகிவிட்டு "ச்வாமிகளே! இதை கிருபையுடன் ஏற்றுக்கொள்ளவேண்

டும். எங்கள் முட்டாள்தனத்திற்கு மன்னித்துக் காக்கவேண்டும்" என்று வேண்டுகிறார்கள்.

அதிசயமான இக் காக்ஷியை வெளியிடவும் முடியவில்லை. வெளியிடாதிருக்கவும் முடியவில்லை. ஏற்கெனவே கொலை செய்து விட்ட பாதகத்தில் குரு ஆணையை மீறி வெளியிட்டுவிட்டால் பின்னும் பாதகமாகவன்றோ முடியும். அதோடு இறந்துவிட்ட மனிதன் உயிருடன் வந்திருக்கிறான் என்பதையறிந்தால் உலகம் பலவிதமாகப் பேசி ஏசி ஸ்வாமிகளின் ஆவிக்கு ஹானியைத் தேடி விடுவார்களே! என்கிற பெரிய குழப்பமும் பீதியும் உண்டாகி வதைக்கிறன.

எரவானத்தில் வைத்த காஷாயத்தைச் சாமியார் எப்போது எடுக்க வருகிறாரோ, அதைப் பார்த்துக்கொண்டிருந்து அவர் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற தீவிரமான எண்ணமும் ஆசையும் எல்லோருடைய மனத்திலும் ஊன்றிவிட்டன. அவர்களுடைய எண்ணம் வேறெதிலும் செல்லவே இல்லை.

ஊண், உறக்கம், துறந்தது. மற்ற வேலைகளிலும் நாட்டம் அற்றது. முற்றத்தில் ஒருவர் மாற்றி ஒருவர் நின்று எரவானத்தையே இமைகொட்டாது பார்த்து நிற்கும் திருப்பணியிலீடுபட்டார்கள். அண்ணாந்து பார்த்துப் பார்த்துக் கழுத்தும் நோவெடுத்துக்கொண்டது. கண்களிலும் மினுமினுப்பூச்சி பறக்க வாரம்பித்தது. எனினும் ஊக்கம் குறையவில்லை. சலிப்பும் உண்டாகவில்லை. குருபக்தியும் ஞானமுமே தலை தூக்கி நின்றன. அதே நாட்டமாக உறுதி நிலைத்தது.

ஸ்வாமியார் தினம் மூன்றுகாலமும், மடத்திலிருக்கும்போது தவறாது 'அங்கிங்கெனாதபடி' என்ற தாயுமானவர் பாடலை வெகு இனிமையாகப் பாடுவார்; அதை சீடர்களும் முறையே முக்காலமும் பாடி வந்தார்கள். அதே பாட்டு திடீரென்று எரவானத்திற்குமேல் கேட்டதைக்கண்டு சிஷ்யர்கள் அப்படியே பிரமித்து நடுநடுங்கிப் பயந்து பக்திப் பரவசமாகி, "ஸ்வாமிகளே! குருநாதா! சரணம்! சரணம்!...எங்கள் முட்டாள்தனத்திற்கு மன்னிக்கக் கோருகிறோம்...குருநாதா! தங்கள் தரிசனத்தையும் எங்களுக்குக் காட்டிக் கடைத்தேறச் செய்யவேண்டும். குரல்மட்டும் கேட்டால் போதாது. நாங்கள் பயப்படமாட்டோம். தங்களுடைய திவ்யதரிசனம் கிடைத்தால்போதும்" என்று எல்லோரும் ஒரே முகமாகக் கூக்குரலிட்டார்கள். அக் குரல்களின் சப்தம் எதிரொலியுடன் அந்த மடத்தில் சூழ்ந்துகொண்டு ரீங்காரம் செய்தது.

எனது நன்றியறிதல்

நிற்க, யுத்த நெருக்கடி அதிகமாகி சென்னைக்கு அபாயம் என்று அறிவிக்கப்பட்ட உடனே நமது சந்தாதாரர்களில்சிலரும், ஏஜண்டுகளில்சிலரும் தமது பரிபூர்ண அன்பும் ஆதரவுங் காட்டி தம்தம் ஊர்களுக்கு நமது காரியாலயத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்வதாகவும் கடிதங்கள் எழுதியும், நேரில் தெரிவித்தும் அழைத்தார்கள்.

அந்த அன்பின் அழைப்பினல் எமது உள்ளம் இரட்டிப்பாய்ப் பூரித்து புலகிதமுறுகிறது. இத்தகைய பேரன்பும் ஆதரவும் நம்மோகினிச் செல்வியிடம் என்றென்றும் இருக்கும்படியான கிருபையை பகவான் செய்யும்படி வேண்டிக்கொண்டு கடிதமெழுதியவர்களுக்கும், நேரில் அழைத்தவர்களுக்கும் எனது பரிபூர்ணமான நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைச் செலுத்துகிறேன். அழைப்பிற்கிணங்கி வருவதற்கு பலவித சந்தர்ப்பங்களால் இயலாததற்கு மன்னிக்கவும்.

தற்சமயம் நமது காரியாலயத்திற்கான இடமும், மற்ற இதர சௌகரியங்களும் செய்து கொடுத்து அபாரமான அன்புடன் உதவி புரியும் மிராசுதாரர்களாகிய பெரியவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்து தண்டன் சமர்ப்பிக்கின்றேன்.

பெரியாரின் வருகை

நிற்க, ப்ரபல இலக்கிய ஆசிரியரான ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்கள் நமது மோகினியை தமது அரிய கட்டுரைகளால் சென்ற 5 மாதங்களாக அலங்கரித்து ஆசி கூறுவது நேயர்கள் அறிந்த விஷயமேயாகும். அத்தகைய பெரியார் சென்ற 24-4-42 தேதியன்று கிராமத்தில் நிலவப்பட்டுள்ள நமது மோகினியின் காரியாலயத்திற்கு அன்புடன் விஜயம்செய்து நமக்கு ஆசி கூறிச் சென்றதானது, விதுரரின் குடிசையை நாடிச் சென்ற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உன்னத சம்பவத்தை நினைப்பூட்டுகிறது. எனது ஆப்த சினேகிதையும் மோகினியின் அன்பருமான ஸ்ரீமதி அம்புஜம்மாளின் ப்ராணபதியும், அருமைப் புதல்வரும் ஸ்ரீமான் ஆசார்யா அவர்களுடன் சேர்ந்தாற்போல வந்ததானது மும்மூர்த்திகள் எங்கள் கிராமத்திற்கு வந்ததாகவே உத்ஸாகமும் சந்தோஷமும் உண்டாக்கியது.

முக்கிய அறிவிப்பு

நமது காரியாலயம் கிராமத்திற்கு மாற்றப்பட்டுவிட்டதால் ரேடியோ கேட்க வசதியில்லை. ஸங்கீதப் பகுதியில், நமது ஸாஹித்யங்களை ஸ்வரப்படுத்தி உதவும் நாதஸ்வர வித்வான் ஸ்ரீமான். ஏ. பார்த்தசாரதி அவர்கள் தற்சமயம் ஆந்திர தேசத்தில் நாதஸ்வர செட்டுடன் பிரயாணஞ் செய்வதால் ஸ்வரப்படுத்திக் கொடுக்க அவகாசமில்லை. ரேடியோ டயரியும், வாணியின் ப்ரஸாதமும் நாம் சென்னைக்குத் திரும்பிச் சென்றபிறகுதான் வெளியாகும் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெங்கடாபுரம்
சிங்கப்பெருமாள் கோவில்
1--5--42.

நன்றியறிதலுள்ள,
வை. மு. கோதை

Regd. No. M. 2210.

ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

இப்போது 19-வது ஆண்டு நடைபெறுகிறது

வருஷசந்தா: ரூ. 1-8. தனிப் பிரதி: அணா. 2.

ஜீவியசந்தா: ரூ. 25.

ஜீவிய சந்தாதாருக்கு சஞ்சிகையை அனுப்புவதுடன் இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனமாக அளிக்கப்படும். முன்பணமனுப்பவும்; வி. பி. கிடையாது.

ஸ்ரீமதி. வை. மு. கோ. எழுதிய 57 நாவல்கள்

ரூ. 2-8

வைதேகி
ராதாமணி
சாருலோசனு
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
யாகிநி

ரூ. 1-8

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1-4

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனுதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை
கலாநிலயம்

ரூ. 1

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

அணா 14

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12

கதம்பமாலை *

அணா 10

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணா 6

பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

அணா 4

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

“ஜகன்மோகினி” ஆபீஸ்,

...மாள் கோவில் போஸ்ட், (செங்கல்பட்டு ஜில்லா.)

& PUBLISHED BY V. M. PARTHASARATHY
SS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, B. O.